தினபூமி
thinaboomi.com

பூமி: 31 சுற்று: 211 ஆடி 07 | RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, புதன், ஜூலை 23, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**இந்தியா-பாகிஸ்தான் போரை போல் பல போர்களை நிறுத்தியவர் ட்ரம்ப்: அமெரிக்க ஊடக செயலாளர் தகவல்**
...2-ம் பக்கம்

**பதவியை ராஜினாமா செய்த ஜெகதீப் தன்கருக்கு பிரதமர் மோடி பாராட்டு**
...3-ம் பக்கம்

**இன்று 4-வது டெஸ்ட்: இங்கிலாந்துக்கு பதிலடி கொடுக்குமா இந்தியா..?**
...6-ம் பக்கம்






● சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் 2024-2025-ம் கல்வியாண்டில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இதில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், முதன்மைச்செயலாளர் பி.சந்திரமோகன், பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கவர்னர்களுக்கு காலக்கெடு நிர்ணயித்த விவகாரம்:

# ஜனாதிபதியின் 14 கேள்விகளுக்கு ஒருவாரத்தில் பதிலளிக்க வேண்டும்

## மத்திய, மாநில அரசுகளுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, ஜூலை 23-

**மசோதாக்கள் தொடர்பாக முடிவெடுக்க கவர்னர்களுக்கு காலக்கெடு நிர்ணயித்த விவகாரத்தில் ஜனாதிபதி திரௌபதி முர்முவின் கேள்விகளுக்கு மத்திய மற்றும் அனைத்து மாநில அரசுகளும் ஒரு வார காலத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டு உள்ளது.**

**பரபரப்பான தீர்ப்பு....**

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட பல்கலைக்கழகங்கள் தொடர்பான மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கவர்னர் ஆர்.என்.ரவி நீண்டகாலம் கிடப்பில் போட்டு இருந்தார். இதனால் கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட் கடந்த ஏப்ரல் மாதம் 8-ந் தேதி பரபரப்பு தீர்ப்பு அளித்தது.

**தனியுரிமை இல்லை...**

அதன்படி சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது கவர்னர் ஒரு மாதத்துக்குள்ளும், கவர்னர் அனுப்பிவைக்கும் மசோதாக்கள் மீது ஜனாதிபதி 3 மாதங்களுக்குள்ளும் முடிவு எடுக்க வேண்டும் என்று காலக்கெடு நிர்ணயித்தது. மேலும் மசோதாக்கள் மீது முடிவு எடுப்பதில் அரசியல் சாசனத்தின் 200-வது பிரிவின் கீழ், கவர்னருக்கு தனியுரிமை கிடையாது என்றும், மந்திரி சபையின் ஆலோசனையின் பேரில் கவர்னர் செயல்பட வேண்டும் என்றும் கூறியது.

**இதுவே முதல்முறை...**

கவர்னர் அனுப்பிவைத்த மசோதா மீது ஜனாதிபதி ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டால், மாநில அரசுகள் நேரடியாக சுப்ரீம் கோர்ட்டை நாடலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். மசோதா மீது முடிவு எடுக்க ஜனாதிபதிக்கு சுப்ரீம் கோர்ட் காலக்கெடு நிர்ணயித்தது இதுவே முதல் முறை ஆகும்.

**14 கேள்விகள் விவரம்**

இதற்கிடையே இந்த உத்தரவு தொடர்பாக ஜனாதிபதி திரௌபதி முர்மு, தனக்குரிய சிறப்பு அதிகாரங்களை பயன்படுத்தி, சுப்ரீம் கோர்ட்க்கு 14 கேள்விகளை விடுத்திருந்தார். ஜனாதிபதி எழுப்பியிருந்த 14 கேள்விகள் விவரம் வருமாறு.,

1. ஒரு மசோதா, கவர்னரின் ஒப்புதலுக்கு வரும்போது அரசியல் சாசனத்தின் 200-வது பிரிவின் கீழ் அவருக்கு இருக்கும் சட்டரீதியான வாய்ப்புகள் என்ன?.

2. அவ்வாறு ஒரு மசோதா அனுப்பப்பட்டு, தனக்குரிய அனைத்து வாய்ப்புகளையும் கவர்னர் பயன்படுத்தும் போது, மந்திரிசபையின் உதவி மற்றும் ஆலோசனைக்கு கவர்னர் கட்டுப்பட்டவரா?.

3. அரசியல் சாசனத்தின் 200-வது பிரிவின்கீழ், கவர்னரின் தனியுரிமை என்பது கோர்ட் ஆய்வுக்கு உட்பட்டதா?.

4. அரசியல் சாசனத்தின் 200-வது பிரிவின்கீழ் கவர்னரின் செயல்பாடுகள் தொடர்பாக கோர்ட் விசாரிக்க, அரசியல் சாசனத்தின் 361-வது பிரிவு தடையாக உள்ளதா?.

5. கவர்னரின் செயல்பாடுகளுக்கு அரசியல் சாசனம் காலக்கெடு நிர்ணயிக்காத நிலையில் கோர்ட் உத்தரவு மூலம் காலக்கெடு நிர்ணயிக்க முடியுமா?.

6. அரசியல் சாசனத்தின் 201-வது பிரிவின்கீழ், ஜனாதிபதியின் தனியுரிமை என்பது கோர்ட் ஆய்வுக்கு உட்பட்டதா?.

7. ஜனாதிபதியின் செயல்பாடுகளுக்கு அரசியல் சாசனம் காலக்கெடு நிர்ணயிக்காத நிலையில், கோர்ட் உத்தரவு மூலம் காலக்கெடு நிர்ணயிக்க முடியுமா?.

8. ஜனாதிபதியின் அனுமதிக்காக கவர்னர் மசோதாவை அனுப்பி வைக்கும்போது, அரசியல் சாசனத்தின் 143-வது பிரிவின்கீழ், சுப்ரீம்

(கடைசி பக்கம் பார்க்க)

## 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் குறித்து ஆலோசனை:

# மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப்பணிகளை தொடர்கிறேன்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, ஜூலை 23-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில், மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளை தொடர்கிறேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் காலை நடைபயிற்சி மேற்கொண்ட போது, அவருக்கு தலை சுற்றல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அதனை சமாளித்துக் கொண்ட முதல்வர், தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில், அ.தி.மு.க. முன்னாள் எம்.பி. அன்வர்ராஜா. தி.மு.க.வில்



இணையும் நிகழ்வில் பங்கேற்றார்.

இந்நிலையில், தலைசுற்றல் தொடர்ந்து இருந்து வந்ததால், சென்னை ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். முதல்வரின் உடல் நிலையைப் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சைகளை மருத்துவர்கள் அளித்து வருகின்றனர். அதோடு, முதல்வரின் உடல்நிலை குறித்து அப்போலோ மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில், அவர் மூன்று நாட்கள் ஓய்வெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலை'யில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில், "மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன்." என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, தமிழக அரசு தரப்பில் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு முதல்வர் ஸ்டாலின் மூன்று நாட்கள் ஓய்வு மற்றும் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகிறார். மருத்துவமனையில் இருந்தபடியே அவர் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று டாக்டர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் நேற்று அவர் அரசு தலைமைச் செயலாளர் முருகானந்தம் உடன் அரசுப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் தொடர்பாக, முதல்வர் ஸ்டாலின் கேட்டறிந்தார்.

(கடைசி பக்கம் பார்க்க)

## வரும் 26-ம் தேதி விரிவாக்கம் செய்யப்பட்ட

# தூத்துக்குடி விமான நிலையத்தை திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி

தூத்துக்குடி, ஜூலை 23-

**வரும் 26-ம் தேதி ரூ.380 கோடியில் விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். மேலும், அன்று ரூ.4,500 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டப்பணிகளுக்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்ட உள்ளார்.**

பிரதமர் மோடி இன்று (புதன்கிழமை) இங்கிலாந்து, மாலத்தீவு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். 23, 24-ம் தேதிகளில் இங்கிலாந்திலும், 25, 26-ம் தேதிகளில் மாலத்தீவிலும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார். மாலத்தீவு சுதந்திர விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் பிரதமர் மோடி 26-ம் தேதி (சனிக்கிழமை) இரவு அங்கிருந்து இந்தியாவுக்கு புறப்படுகிறார்.

மாலத்தீவில் இருந்து பிரதமர் மோடி நேரடியாக தூத்துக்குடிக்கு வர இருக்கிறார். 2 நாள் பயணமாக வரும் பிரதமர் மோடி தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். முன்னதாக 27 மற்றும் 28-ம் தேதிகளில் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. தற்போது அதில் சற்று மாற்றம் செய்யப்பட்டு ஒருநாள் முன்னதாக 26-ம் தேதியே தமிழகத்துக்கு வருகிறார். அன்று இரவு 8 மணி அளவில் மாலத்தீவில் இருந்து தூத்துக்குடி விமான நிலையத்துக்கு பிரதமர் மோடி வருகிறார்.

விமான நிலைய பகுதியில் பிரதமர் மோடிக்கு பா.ஜ.க. சார்பில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு அவர் புதிதாக கட்டப்பட்டு உள்ள விமான பகுதிக்கு செல்கிறார். தூத்துக்குடியில் ரூ.380 கோடியில் சர்வதேச தரத்தில் விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. சர்வதேச தரத்தில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இந்த விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் தற்போது 2 விமான நிறுவனங்கள் மூலம் சென்னை, பெங்களூருக்கு மட்டும் 9 விமானங்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த விமான நிலையம் சர்வதேச தரத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால் இனிமேல் இரவு நேர விமான சேவையையும் தொடங்க முடியும். இதற்காக விமான நிலையத்தில் இதுவரை 1,350 மீட்டர் அளவில் இருந்து வந்த விமான நிலைய ஓடு பாதை தற்போது 3 ஆயிரம் மீட்டர் அளவுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரே நேரத்தில் 5 விமானங்களை நிறுத்தும் வகையிலும் பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்தை திறந்து வைத்த பிறகு வேறு

(கடைசி பக்கம் பார்க்க)

## தற்போது நலமுடன் உள்ளார்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் வீடு திரும்புவார்

## துணை முதல்வர் உதயநிதி தகவல்

சென்னை, ஜூலை 23-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் தற்போது நலமுடன் உள்ளார். விரைவில் வீடு திரும்புவார் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் நடைபயிற்சியில் ஈடுபட்டபோது திடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதற்காக அவர் அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலினின் உடல்நலம் குறித்து அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'முதல்வர் மு.க.ஸ்டாலின் மேலும் 3 நாட்கள் மருத்துவமனையில் தங்கி ஓய்வெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவருக்கு வேறு சில பரிசோதனைகள் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மருத்துவமனையில் இருந்தபடி அரசு பணிகளை முதல்வர் தொடர்ந்து மேற்கொள்வார்' என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், மருத்துவ பரிசோதனைக்காக தேனாம்பேட்டை அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை அழைத்து செல்லப்பட்டார். அங்கு அவருக்கு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து பரிசோதனை முடிந்த நிலையில், தேனாம்பேட்டை அப்பல்லோவில் இருந்து மீண்டும் கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு முதல்வர் திரும்பினார். அப்போது அவர் காரின் முன்பகுதி இருக்கையில் அமர்ந்திருந்தார்.

அதன்பின்னர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- முதல்வர் மு.க.ஸ்டாலின் நலமுடன் உள்ளார். நேற்று காலை முதல்வருக்கு சில பரிசோதனைகள் எடுக்கப்பட்டன. இதுகுறித்து மருத்துவர்கள் அறிக்கை அளிப்பார்கள். 3 நாட்கள் ஓய்வெடுக்க மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர். முதல்வர் விரைவில் குணமடைந்து வீடு திரும்புவார். இவ்வாறு அவர் கூறினார்.

# பேருந்து கட்டணம் உயர்வா? தமிழ்நாடு அரசு விளக்கம்

அரியலூர், ஜூலை 23-

**தமிழகத்தில் அரசு பஸ்களின் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக வெளியான தகவல் குறித்து அமைச்சர் சிவசங்கர் விளக்கமளித்துள்ளார்.**

தமிழகத்தில் அரசு பஸ்களின் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக கடந்த சில நாட்களாக சமூகவலைதளங்களில் தகவல் பரவி வருகின்றன. இந்நிலையில், அரியலூரில் போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் சிவசங்கர் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது, அரசு பஸ் கட்டணம் உயர்வு தொடர்பாக பரவும் கருத்து குறித்து அமைச்சரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த அமைச்சர் சிவசங்கர் கூறுகையில், பஸ் கட்டணம் உயர்வு என்பது வதந்தி. பஸ் கட்டணத்தை உயர்த்துவது குறித்து எந்தவித திட்டமும் இல்லை. தமிழகத்தில் பஸ் கட்டண உயர்வுக்கான சூழ்நிலை ஏற்பட்டபோதும், கட்டண உயர்வை மக்கள் மீது திணிக்காமல் அரசே ஏற்று போக்குவரத்து கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் பஸ் கட்டணம் உயர்வு என்பது நிச்சயம் இருக்காது' என்றார்.

## எதிர்க்கட்சிகள் தொடர் அமளி:

# பாராளுமன்ற இரு அவைகளில் அலுவல்கள் 2-ம் நாள் பாதிப்பு

புதுடெல்லி, ஜூலை 23-

**எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் அமளி காரணமாக பாராளுமன்றத்தின் இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டதால் அலுவல்கள் 2-வது நாளாக பாதிக்கப்பட்டது.**


பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. ஆபரேஷன் சிந்தூர் உட்பட பல முக்கிய விவகாரங்கள் தொடர்பாக நோட்டீஸ் கொடுத்துள்ள எதிர்க்கட்சிகள், மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விட்டு முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தின. இதற்கு ஆளும் தரப்பு ஒப்புக்கொள்ளாததால் இரு அவைகளும் அடுத்தடுத்து பல முறை ஒத்திவைக்கப்பட்டது. இதனால், நேற்று முன்தினம் பாராளுமன்றப் பணிகள் ஏறக்குறைய முடங்கின.

இந்நிலையில், 2-ம் நாளான நேற்று காலை 11 மணிக்கு பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் மக்களவை கூடியதும் ஆபரேஷன் சிந்தூர் விவகாரம் உட்பட முக்கிய பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் எழுப்பின. குறிப்பாக, இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தத்தில் மூன்றாம் தரப்பின்(அமெரிக்கா) பங்களிப்பு குறித்து பிரதமர் மோடி பாராளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் கோஷங்களை எழுப்பினர்.

கேள்வி நேரம் தொடர அனுமதிக்குமாறும் ஆபரேஷன் சிந்தூர் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து ஏற்கெனவே உறுதி அளித்தபடி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றம் ஓம் பிர்லா கூறினார். இதை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினர். இதன் காரணமாக அவையை 12 மணி வரை ஒத்திவைப்பதாக ஓம் பிர்லா அறிவித்தார்.

குடியரசு துணைத் தலைவரும் மாநிலங்களவை தலைவருமான ஜெகதீப் தன்கர் தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து, துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையில் மாநிலங்களவை கூடியது. அப்போது, முந்தைய கோரிக்கைகளோடு, ஜெகதீப் தன்கர் ராஜினாமா குறித்தும் விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால், அவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -13.53 | -29.80 |
| பாயின்ட் 82,186.81 | பாயின்ட் 25,060.90 |



**தங்கம்**
1 சவரன் ₹74,280
1 கிராம் ₹9,285



**வெள்ளி**
1 கிலோ ₹128,000
1 கிராம் ₹128.00


**டாலர்** ₹86.34

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# இந்தியா-பாகிஸ்தான் போரை போல் பல போர்களை நிறுத்தியவர் ட்ரம்ப்

## அமெரிக்க ஊடக செயலாளர் பெருமிதம்



**வாஷிங்டன், ஜூலை 23-**

இந்தியா- பாகிஸ்தான் போரை போல் பல போர்களை நிறுத்தியவர் ட்ரம்ப் எனறு அமெரிக்க ஊடக செயலாளர் கரோலின் லீவிட் கூறினார்.

ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவத்திற்கு பின்பு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் பதற்ற சூழல் உருவானது. 4 நாட்களுக்கு பின்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த முடிவுக்கு வந்தன. பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவது இந்தியாவின் நோக்கமல்ல என மத்திய அரசு கூறியது. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரிவித்தது. ஆனால், அமெரிக்காவின் தலையீட்டாலேயே இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நடைபெறாமல் முடிவுக்கு வந்தது என அந்நாட்டு ஜனாதிபதி ட்ரம்ப் கூறினார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட் செய்தியாளர்களிடம் கூறும்போது, உலக அரங்கில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் என்னென்ன விசயங்களை செய்துள்ளார் என பாருங்கள். இந்தியா-பாகிஸ்தான் போரை போல் பல போர்களை நிறுத்தியவர் அவர். ரஷியா மற்றும் உக்ரைன் இடையேயான போரை நிறுத்த தீவிரத்துடன் அவர் பணியாற்றி வருகிறார் என கூறியுள்ளார். ஈரான் மற்றும் மத்திய கிழக்கு பகுதியில் டிரம்பின் நடவடிக்கைகளையும் அவர் சுட்டி காட்டி பேசினார். ஈரானின் அணு ஆலைகளை முற்றிலும் தகர்த்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் காசா இடையே போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். பணய கைதிகள் அனைவரையும் விடுவிப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார் என கூறியுள்ளார். இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான போரை நிறுத்தினேன் என ட்ரம்ப் தொடர்ந்து கூறி சர்ச்சையை ஏற்படுத்தி வரும் நிலையில், வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட்டும் இதனை கூற தொடங்கியுள்ளார்.



சென்னை, கவர்னர் மாளிகையில், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட நீதியரசர் மணிந்திர மோகன் ஸ்ரீவத்சவாவுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

# ஜனாதிபதியுடன் மாநிலங்களவை துணை தலைவர் நாராயண் சந்திப்பு



**டெல்லி, ஜூலை 23-**

குடியரசு தலைவர் திரௌபதி முர்முவை மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.

பாராளுமன்றத்தில் மழைக்கால கூட்டத்தொடர் இரு அவைகளிலும் நேற்று முன்தினம் காலை தொடங்கிய நிலையில், மாநிலங்களவைத் தலைவரும், குடியரசுத் துணைத் தலைவருமான ஜகதீப் தன்கரும் அவைக்கு வழக்கம்போல் தலைமைத் தாங்கினார். இந்த நிலையில், நேற்றிரவு மருத்துவக் காரணங்களுக்காக தனது பதவியை ராஜினாமா செய்வதாக ஜனாதிபதி திரௌபதி முர்முக்கு தன்கர் கடிதம் எழுதினார்.

இதனைத் தொடர்ந்து, நேற்று காலை மாநிலங்களவை அவையின் துணைத் தலைவரான ஹரிவன்ஷ் நாராயண் தலைமையில் கூடியது. மேலும், மாநிலங்களவையில் குடியரசு துணைத் தலைவரின் ராஜினாமாவை குடியரசு தலைவர் ஏற்றுக் கொண்டு, முறைப்படி மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த துணை ஜனாதிபதி தேர்ந்தெடுக்கும் வரை மாநிலங்களவையின் துணைத் தலைவராகவுள்ள ஹரிவன்ஷ், அவையை வழிநடத்தவுள்ளார். இந்த நிலையில், குடியரசு தலைவர் மாளிகைக்கு நேரில் சென்ற ஹரிவன்ஷ், அவரை மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். ஹரிவன்ஷ், அடுத்த குடியரசு துணைத் தலைவரா? ஐக்கிய ஜனதா தளக் கட்சியைச் சேர்ந்த எம்.பி.யான ஹரிவன்ஷ், 2020 ஆம் ஆண்டு முதல் மாநிலங்களவை துணைத் தலைவராக பதவி வகித்து வருகிறார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில், பிகார் முதல்வர் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளக் கட்சி முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், பிகார் சட்டப்பேரவைத் தேர்தல் சில மாதங்களில் நடைபெறவுள்ளன. இந்த நிலையில், மாநிலங்களவை துணைத் தலைவராகவுள்ள ஹரிவன்ஷ், அடுத்த துணை ஜனாதிபதி வேட்பாளராக தேசிய ஜனநாயகக் கூட்டணி அறிவிக்க அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதனிடையே, பிகார் முதல்வர் நிதிஷ் குமாரே துணை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து நலம் விசாரித்த மு.க.அழகிரி

**சென்னை, ஜூலை 23-**

முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திக்க அவரது சகோதரர் மு.க.அழகிரி அப்பல்லோ மருத்துவமனைக்கு வந்துள்ளார். முதல்வரை சந்தித்த மு.க.அழகிரி அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று முன்தினம் காலை நடைபயிற்சி சென்றபோது லேசான தலைசுற்றல் ஏற்பட்டது. இதையடுத்து அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு டாக்டர்கள் முழு உடல் பரிசோதனை மேற்கொண்டனர். இதில் பெரிய அளவில் அவருக்கு பிரச்சனை ஏதும் இருப்பதாக கண்டறியப்படவில்லை. 2 நாட்கள் ஓய்வெடுத்தால் போதும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் முழுவதும் அப்பல்லோவில் இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று காலை அருகில் உள்ள தேனாம்பேட்டை அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு சில மருத்துவ பரிசோதனைகளை டாக்டர்கள் மேற்கொண்டனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மருத்துவ பரிசோதனை முடிந்ததும் மீண்டும் ஆயிரம் விளக்கு அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு திரும்பினார். அங்கு முதலமைச்சர் 2 நாட்கள் ஓய்வில் இருப்பார் என தெரிகிறது.

இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திக்க அவரது சகோதரர் மு.க.அழகிரி அப்பல்லோ மருத்துவமனைக்கு வந்துள்ளார். முதல்வரை சந்தித்த மு.க.அழகிரி அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார்.

# வங்கதேச விமானம் விபத்து: உயிரிழப்பு 27 ஆக அதிகரிப்பு

**டாக்கா, ஜூலை 23-**

வங்காளதேச விமான விபத்தில் சிக்கி விமானி மற்றும் மாணவர்கள் உள்பட பலியானவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது. இதில் 25 பேர் குழந்தைகள் ஆவர். 170-க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வங்காளதேசத்தின் குர்மிடோலா என்ற இடத்தில் அந்த நாட்டின் விமானப் படை தளம் உள்ளது. இங்கு வழக்கமாக வீரர்கள் விமானத்தில் பயிற்சி மேற்கொள்வது வழக்கம். இதன்படி நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணிக்கு எப்-7 பி.ஜி.ஐ. என்ற போர் விமானம் பயிற்சியில் ஈடுபட்டது. இதில் விமானி மற்றும் பயிற்சி வீரர்கள் இருந்தனர். இந்த விமானம் சீனாவின் தயாரிப்பாகும். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. தலைநகர் டாக்காவின் உத்தரா பகுதியில் உள்ள 2 மாடிகள் கொண்ட பள்ளிக்கூடம் மீது அந்த விமானம் விழுந்து நொறுங்கியது.

சிறிது நேரத்தில் அந்த விமானம் கொழுந்துவிட்டு எரிந்தது. இதில் அங்கு தேர்வு எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். இதனை கேள்விப்பட்டதும் மாணவர்களின் பெற்றோர் பதறியடித்துக் கொண்டு அங்கு ஓடிச் சென்றனர். இந்த சம்பவத்தால் பள்ளி வளாகம் போர்க்களம் போல் காட்சி அளித்தது. இதனையடுத்து அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீய்ச்சியடித்தனர்.

இதற்காக ராணுவ ஹெலிகாப்டர்களும் அங்கு வரவழைக்கப்பட்டன. அவர்களது பல மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. மற்றொருபுறம் படுகாயம் அடைந்தவர்களை மீட்கும் பணியும் துரிதமாக நடைபெற்றது. இந்தநிலையில், விமான விபத்தில் சிக்கி விமானி மற்றும் மாணவர்கள் உள்பட பலியானவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது.

இதில் 25 பேர் குழந்தைகள் ஆவர். 170-க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பள்ளி வளாகத்தில் ஏற்பட்ட இந்த விபத்து நாட்டையே உலுக்கியது. எனவே விபத்துக்கான காரணம் குறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குரூப்-4 தேர்வு விடைக்குறிப்பு வெளியீடு

**சென்னை, ஜூலை 23-**

குரூப்-4 தேர்வர்கள் விடைக்குறிப்பை டி.என்.பி.எஸ்.சி. வெளியிட்டது.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் 3,935 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்காக ஒருங்கிணைந்த குரூப்-4 தேர்வு, கடந்த 12-ம் தேதி நடந்தது. டிஎன்பிஎஸ்சி நடத்திய இத்தேர்வை 13.48 லட்சம் பேர் எழுதினர். இந்நிலையில், தேர்வுக்கான உத்தேச விடைகள் அடங்கிய விடைக்குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

டி என் பி எஸ் சி - யின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) தேர்வர்கள் விண்ணப்ப பதிவு எண் உள்ளிட்ட விவரங்களை கொடுத்து பார்த்துக்கொள்ளலாம். உத்தேச விடைக்குறிப்பில் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் தேர்வர்கள் உரிய ஆவணங்களுடன் வரும் 28-ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என்று டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

மேலும், அதிகாரபூர்வ இணைய வழியில் மட்டுமே தெரிவிக்க வேண்டும். அஞ்சல், மின்னஞ்சல் வழியாக பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது. தேர்வின் போது தேர்வர்களுக்கு எந்த குறியீட்டைக் கொண்ட வினாத்தாள் வழங்கப்பட்டிருந்தாலும், தற்போது தேர்வாணையத்தின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாதிரி வினாத்தாள் தொகுப்பில் உள்ள கேள்விகளின் வரிசை எண் படியே தேர்வர்கள் தங்களது மறுப்பினைத் தெரிவிக்க வேண்டும் எனவும் டிஎன்பிஎஸ்சி இணைய தளத்தில் கூறப்பட்டுள்ளது.

# சிவகாசி பட்டாசு ஆலை வெடி விபத்து: மேலாளர் கைது

**விருதுநகர், ஜூலை 23-**

சிவகாசி பட்டாசு ஆலை வெடி விபத்து தொடர்பாக பட்டாசு ஆலையின் மேலாளர் பிரபாகரன், போர்மேன் செல்வகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவகாசி அருகே நாரணாபுரம்-அனுப்பன்குளம் சாலையில் சீனிவாசன் மகன் கோபி என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை உள்ளது. நாக்பூர் உரிமம் பெற்ற இந்த ஆலையில் 50 அறைகள் உள்ளன. 60-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் வழக்கம்போல் பட்டாசு உற்பத்தி நடந்தது. மாலை 3.30 மணி அளவில் ஆலையில் உள்ள ஒரு அறையில் உற்பத்தி செய்த பட்டாசுகளை எடுத்துச்சென்றபோது திடீரென பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் சிவகாசி அருகே உள்ளபட்டி முத்துராமலிங்கபுரம் காலனியை சேர்ந்த தங்கராஜ் என்பவருடைய மகன் கார்த்திகை செல்வம் (வயது 25), சிவசாமி என்பவருடைய மனைவி சங்கீதா (43), குருசாமி என்பவருடைய மனைவி லட்சுமி (45) ஆகியோர் உடல் கருகி பரிதாபமாக இறந்தனர்.


மேலும் அப்பகுதியை சேர்ந்த மாரியம்மாள் (50), நாகலட்சுமி (55) ஆகியோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். சிவகாசி அரசு ஆஸ்பத்திரியில் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த கோர விபத்தில் 4 அறைகள் தரைமட்டமாகின. வெடி விபத்து குறித்து சிவகாசி கிழக்கு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், சிவகாசி பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 3 பேர் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக பட்டாசு ஆலையின் மேலாளர் பிரபாகரன், போர்மேன் செல்வகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தலைமறைவாக உள்ள பட்டாசு ஆலை உரிமையாளர் சீனிவாசனை தனிப்படை போலீசார் தேடி வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**23-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பணம் காசு சேரும். புத்திர பாக்கியம் ஏற்படும். புதிய தகவல்கள் மூலம் புதிய உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். நட்பு வட்டம் விரிவடையும். தன்னம்பிக்கை கூடும்.

**ரிஷபம்:-** குடும்பத்தில் நிம்மதி பிறக்க மனைவியிடம் அன்பாக இருத்தல் அவசியம். எவரிடமும் வாக்குவாதங்களை தவிர்ப்பது நலம். சுமாரான பணவரவு உள்ள நாள். எடுத்த காரியங்களில் தடை, தாமதங்கள் ஏற்படும்.

**மிதுனம்:-** வாக்குவன்மையால் தனலாபம் ஏற்படும், நல்லுணவு, படுக்கை சுகம், புத்தாடைகள் ஆகியவை ஏற்படும். சுகந்த பரிமள வாசனாதி திரவியங்கள் சேரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்கும்.

**கடகம்:-** சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். வார்த்தைகளைக் கட்டுப்படுத்தவும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையுடன், வேகத்தை குறைத்து விவேகமாக நடந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம்.

**சிம்மம்:-** பெண்களால் தன லாபம் அடைவீர்கள். பிறருக்கு விருந்து உபசாரம் செய்து மகிழ்வார்கள். பிரிந்தவர் கூடிப் பேரின்பம் அடைவது உறுதி. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி கிட்டும்.

**கன்னி:-** அரசு பணியில் உள்ளவர்களுக்கு அனுகூலமான நாள். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு நீண்ட நாளுக்குப் பின் வேலைவாய்ப்பு கிடைத்து அதன் காரணமாக மகிழ்ச்சி அடைவர்.

**துலாம்:-** தெய்வபக்தி மேலிடும். கோவில் திருப்பணி போன்ற புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்., புத்திர பாக்கியம் ஏற்படும். சுகமும் சந்தோஷமும் அதிகரிக்க.

**விருச்சிகம்:-** நேர்மையாகவும், நியாயமாக நடக்க வேண்டிய நாள். கோபத்தால் குழப்பங்கள் ஏற்படலாம். மனைவியின் கலகத்தால், உறவுகளுக்குள் குழப்பம் ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**தனுசு:-** வாகன சுகம் உண்டாகும். பல வழிகளிலும் பணம் வரும். பெரிய மனிதர் எனப் பெயர் எடுப்பீர்கள். காதல் வயப்படுவார்கள். அதனால் பெருமகிழ்ச்சி உண்டாகும். எல்லாவிதத்திலும் பூரண சுகம் ஏற்படும்.

**மகரம்:-** பகைவர்கள் பணிவர். எல்லா நலன்களும் உண்டாகும். அன்பு நண்பர்களால் அனுகூலம் ஏற்படும். புது சினேகிதிகளின் அறிமுகம் ஆனந்தம் அளிக்கும். சொந்த வீடு வாங்கும் யோகம் ஏற்படும்.

**கும்பம்:-** உங்கள் திறமையை எவ்வளவு காட்டினாலும் அது பளிச்சிடும். பார்ப்பவர்கள் குற்றமே சொல்வர். பிறர் குறை சொல்வது காரணமாக உங்கள் மனம் சஞ்சலப்படும்.

**மீனம்:-** செய்ய நினைக்கும் காரியங்களை வேறொரு நாளைக்கு ஒத்தி வைப்பது நல்லது. வெளியில் செல்லும் முன் வாகனங்களின் பாகங்களை கூடிய மட்டும் பரிசோதித்து செல்வது சிறப்பு.

# ஜப்பான்: பாராளுமன்ற மேல்சபை தேர்தலில் ஆளுங்கட்சி தோல்வி

**டோக்கியோ,ஜூலை 23-**

ஜப்பானில் நாடாளுமன்ற மேல்சபை தேர்தலில் ஆளுங்கட்சி தோல்வியடைந்துள்ளது.

ஜப்பானில் பிரதமர் ஷிகெரு இஷிபா தலைமையிலான லிபரல் டெமாக்ரடிக் கட்சி ஆட்சி நடைபெறுகிறது. இதற்கிடையே நாடாளுமன்றத்தின் மேல்சபை தேர்தல் நடந்து முடிந்தது. மேல்சபையை பொறுத்தவரை எளிய பெரும்பான்மை பெற 125 இடங்களில் வெற்றி பெற வேண்டும். இதில் ஆளுங்கட்சிக்கு ஏற்கனவே 75 இடங்கள் இருந்தன. எனவே இந்த தேர்தலில் பெரும்பான்மை பெற மேலும் 50 இடங்களில் வெற்றி பெற வேண்டிய சூழல் இருந்தது.

ஆனால் லிபரல் டெமாக்ரடிக் கட்சிக்கு 47 இடங்களே கிடைத்தன. இதனால் ஆளுங்கட்சி இரு அவைகளிலும் தனிப்பெரும்பான்மையை இழந்தது. இது ஆளுங்கட்சிக்கு விழுந்த மற்றொரு அடியாகும். முன்னதாக கடந்த அக்டோபர் மாதம் நாடாளுமன்றத்தின் கீழ்சபை தேர்தலிலும் லிபரல் டெமாக்ரடிக் கட்சி தோல்வியடைந்தது.

1955-ம் ஆண்டு கட்சி தொடங்கியதில் இருந்து லிபரல் டெமாக்ரடிக் கட்சி இரு அவைகளிலும் பெரும்பான்மையை இழப்பது இதுவே முதல்முறை ஆகும். இந்த தொடர் தோல்விகள் ஆளுங்கட்சிக்கு பெரும் பின்னடைவைக் கொடுத்துள்ளது. எனினும் அமெரிக்க வரி அச்சுறுத்தல் உள்ளிட்ட காரணங்களால் தான் பதவி விலக போவதில்லை எனவும், கூட்டணி கட்சிகள் ஆதரவுடன் தலைமை பொறுப்பை ஏற்று நாட்டுக்காக தொடர்ந்து உழைப்பேன் எனவும் பிரதமர் ஷிகெரு இஷிபா தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் மழைக்கு 6 பேர் பலி

**சிந்த், ஜூலை 23-**

பாகிஸ்தானில் பெய்த தொடர் மழைக்கு 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் சிந்த் மாகாணத்தில் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், மேற்கூரை இடிந்து விழுந்தும், மின்சாரம் தாக்கியும், நீரில் மூழ்கியும் பலர் பலியாகி உள்ளனர். இவர்களில், யார் முகமது காலனி பகுதியில் ரஜியா முகேரி (வயது 40) என்ற பெண்ணும், இஸ்லாம் சச்சார் கிராமத்தில் கவீதா சச்சார் (வயது 22) என்ற பெண்ணும் மழை பெய்து கொண்டிருந்தபோது, மோட்டாருக்கு சுவிட்ச் போடும் போது, மின்சாரம் பாய்ந்ததில் உயிரிழந்தனர்.

இதேபோன்று, வீட்டுக்கு வெளியே இருந்த மின்கம்பத்தில் கை வைத்ததில், மின்சாரம் பாய்ந்து இம்தாத் அலி சர்கி என்ற 13 வயது சிறுவன் பலியாகி விட்டான். ரஷீத் அலி மற்றும் அபு பக்கர் ஆகிய சகோதரர்கள் 2 பேரும் குளிக்கும்போது நீரில் மூழ்கி உயிரிழந்தனர். மிஸ்பா என்ற 7 வயது சிறுவன் விளையாடும்போது, குளத்தில் மூழ்கி பலியானான். கனமழையுடன் கூடிய பலத்த காற்று வீசியதில், மின் இணைப்பு துண்டிப்பு ஏற்பட்டு நீண்ட நேரம் சரி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. பாகிஸ்தானில் நடப்பு பருவமழை காலத்தில், கனமழையால் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

# சூரத் விமான நிலையத்தில் 28 கி. கடத்தல் தங்கம் பறிமுதல்

**சூரத், ஜூலை 23-**

பேஸ்ட் வடிவத்திலான 28 கிலோ தங்கத்தை உடலில் மறைத்துக் கட்டி, துபாயில் இருந்து கடத்தி வந்த குஜராத் தம்பதியை, சூரத் விமான நிலையத்தில் போலீசார் கைது செய்தனர்.

குஜராத் மாநிலம் சூரத் விமான நிலையத்திற்கு துபாயிலிருந்து ஏர் இந்தியா ஐஎக்ஸ்-174 விமானம் வந்தது. இந்த விமானத்தில் வந்திறங்கிய ஒரு தம்பதி மீது சந்தேகமடைந்த மத்திய தொழில்துறை பாதுகாப்பு படையினர், அவர்களை சோதனையிட்டனர். தம்பதியரை சோதித்ததில் அவர்களின் உடல்பகுதியில் நடுப்பகுதி மற்றும் மேல் உடல்பகுதிகளில் மொத்தம் 28 கிலோ தங்க பேஸ்ட் மறைத்து கட்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் அந்த ஆணிடம் 12 கிலோ தங்கமும், பெண்ணிடமிருந்து 16 கிலோ தங்கமும் இருந்தது. மொத்தம் 28 கிலோ தங்கத்தை பறிமுதல் செய்து விசாரித்து வருகின்றனர். அவர்கள் குஜராத்தை சேரந்தவர்கள் என தெரியவந்துள்ளது. சூரத் விமான நிலைய வரலாற்றில் இதுவே மிகப்பெரிய தங்க கடத்தலாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மீண்டும் ரூ.74 ஆயிரத்தை தாண்டியது தங்கம் விலை

**சென்னை, ஜூலை 23-**

சென்னையில் நேற்று ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.105 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,285-க்கு விற்பனையானது. தங்கம் விலை பவுனுக்கு ரூ.840 உயர்ந்து ரூ.74,280-க்கும் விற்பனையானது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவை தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கியக் காரணிகளாக உள்ளன.

அதனடிப்படையில், ஆபரணத் தங்கத்தின் விலை கடந்த சில நாட்களாகவே கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

இந்த நிலையில், நேற்று (ஜூலை 22) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.105 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,285-க்கு விற்பனையானது. தங்கம் விலை பவுனுக்கு ரூ.840 உயர்ந்து ரூ.74,280-க்கும் விற்பனையானது. வெள்ளி கிராமுக்கு ரூ.2 உயர்ந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.128-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.1,28,000-க்கும் விற்பனையானது.

# மணமகளுக்கு தங்கத்துடன் இலவச பட்டுச்சேலை: இ.பி.எஸ். வாக்குறுதி

**கும்பகோணம், ஜூலை 23-**

''தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்துடன் மணமகளுக்கு இலவசமாக பட்டுச்சேலை வழங்கப்படும்'' என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., வாக்குறுதி அளித்துள்ளார்.



கும்பகோணத்தில், அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் மாற்றுக் கட்சியினர் அ.தி.மு.க.,வில் இணைந்தனர். இந்த நிகழ்ச்சியில், இ.பி.எஸ்., பேசியதாவது: தி.மு.க., ஆட்சியில் விவசாயிகளுக்காக எந்த திட்டமும் இல்லை. மக்கள் சேவையில் முதன்மையான கட்சி என்றால் அ.தி.மு.க., தான். ஆட்சிக்கு வந்த பின் நெசவாளர்களுக்கு தரமான பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

கைத்தறி தொழில் மிகவும் நலிவடைந்துவிட்டது. அ.தி.மு.க., ஆட்சியில் விசைத்தறியாளர்களின் நலன் காக்கப்பட்டது. முடிந்த அளவுக்கு உங்களுக்கு நன்மை செய்யும் விதமாக, அ.தி.மு.க., ஆட்சி அமைந்த உடன் தாலிக்கு தங்கம் திட்டத்துடன் மணமகளுக்கு இலவசமாக பட்டுச்சேலை வழங்கப்படும்.

பாரம்பரியமாக நெசவுத் தறியில் ஈடுபடுவோரை வாழ வைக்கும் வகையில் அ.தி.மு.க., ஆட்சி அமையும் போது அரசு நடவடிக்கை எடுக்கும். அன்றைக்கு உற்பத்தி செய்யப்படும் துணிக்கு அன்றைய தினமே பணம் கொடுக்கும் நிலை உருவாக்கப்படும். இவ்வாறு இ.பி.எஸ்., பேசினார்.

## விருதுநகர் மாவட்டத்தில்
# 20 பட்டாசு ஆலைகளின் உரிமம் தற்காலிகமாக ரத்து

**விருதுநகர், ஜூலை 23-**

விருதுநகரில் 20 பட்டாசு ஆலைகளின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான பட்டாசு ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகளில் ஆயிரக்கணக்கானோர் பட்டாசு தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே, பட்டாசு ஆலைகளில் அடிக்கடி வெடிவிபத்து சம்பவங்கள் நடைபெற்று உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. அதேவேளை, வெடிவிபத்தை தடுக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் போர்மேன்கள், பட்டாசு ஆலை உரிமையாளர்களுக்கு தொழிலக பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளில் பல பட்டாசு ஆலை உரிமையாளர்கள் பங்கேற்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், விருதுநகரில் 20 பட்டாசு ஆலைகளின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளில் பங்கேற்காததால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்டம் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## துணை ஜனாதிபதி பதவி ராஜினாமா:
# தன்கருக்கு பிரதமர் மோடி பாராட்டு

**புதுடில்லி, ஜூலை 23-**

குடியரசு துணைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ள ஜெகதீப் தன்கருக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவரான ஜெகதீப் தன்கர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். உடல்நிலையை கருத்தில் கொண்டு இந்த முடிவை அவர் எடுத்துள்ளார். ராஜினாமா தொடர்பாக குடியரசு தலைவர் திரவுபதி முர்முக்கு கடிதம் எழுதியுள்ளார். குடியரசு துணைத் தலைவர் மாநிலங்களவை தலைவராக செயல்படக் கூடியவர்.

இதனால் மாநிலங்களவை தலைவர் பதவியில் இருந்தும் விலகியுள்ளார். அவரது ராஜினாமாவை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் ஜெகதீப் தன்கருக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் உள்பட பல்வேறு பதவிகளில் நமது நாட்டிற்கு சேவை செய்ய ஜெகதீப் தன்கர் பல வாய்ப்புகளை பெற்றுள்ளார். அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வாழ்த்துகிறேன். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கு எதிர்ப்பு:
# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்




**புதுடெல்லி, ஜூலை 23-**

பிஹாரில் இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரின் 2ம் நாளான நேற்று, வழக்கம் போல் இரு அவைகளும் காலை 11 மணிக்குக் கூடின. அப்போது, இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர், இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தத்தின் பின்னணி பற்றியும், பிஹாரில் இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் சிறப்பு தீவிர ஆய்வு என்ற பெயரிலான வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதனால், பாராளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

இதையடுத்து, வெளியே வந்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மகர் துவார் எனும் பாராளுமன்ற வாயிலில் கூடி பிஹாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

eமக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் எம்.பி.க்கள் பிரியங்கா காந்தி, கே.சி. வேணுகோபால், ஜோதிமணி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், திமுக எம்.பி.க்கள் டி.ஆர். பாலு, கனிமொழி, ஆ. ராசா, ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் மிசா பாரதி, மனோஜ் ஜா உள்ளிட்ட ஏராளமான எம்.பி.க்கள் கைகளில் எஸ்.ஐ.ஆர்.க்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

# குரூப்-4 தேர்வு விடைத்தாள் பெட்டிகள் பிரிக்கப்பட்டதாக வெளியான செய்தி
## டி.என்.பி.எஸ்.சி. மறுப்பு

**சென்னை, ஜூலை 23-**

குரூப்-4 விடைத்தாள் பெட்டிகள் பிரிக்கப்பட்டதாக வெளியான செய்திக்கு டி.என்.பி.எஸ்.சி. மறுப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ( டி.என்.பி.எஸ்.சி.) சார்பில் வி.ஏ.ஓ மற்றும் இளநிலை உதவியாளர் போன்ற காலி பணியிடங்களை நிரப்ப, கடந்த 12ஆம் தேதி தமிழகம் முழுவதும் குரூப் 4 போட்டி தேர்வுகள் நடத்தப்பட்டன. சுமார் 11 லட்சத்து 48 ஆயிரம் பேர் தேர்வு எழுதினர்.

இந்நிலையில், சேலம் மாவட்டத்தில் இருந்து அனுப்பப்பட்ட விடைத்தாள் கட்டுகள் உரிய பாதுகாப்பில்லாமல், அட்டைப் பெட்டிகள் ஆங்காங்கே கிழிக்கப்பட்டும், முறையாக சீலிடப்படாமலும் இருக்கிற புகைப்படங்கள் வெளியாகி, சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. இது குறித்து டி.என்.பி.எஸ்.சி. முழுமையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் தேர்வர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்நிலையில் குரூப்-4 விடைத்தாள் பெட்டிகள் பிரிக்கப்பட்டதாக வெளியான செய்திக்கு டி.என்.பி.எஸ்.சி. மறுப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கத்தில், ''குரூப் 4 விடைத்தாள்கள் டிரங்க் பெட்டிகளில் வைத்து சீல் வைக்கப்படும். சாதாரண அட்டைப் பெட்டிகளில் கொண்டு வரப்படாது.

விடைத்தாள் தவிர்த்து மற்ற தேர்வு ஆவணங்கள் மட்டுமே அட்டைப் பெட்டியில் அனுப்பப்படும். ஆவணங்கள் பிரிக்கப்பட்ட நிகழ்வு எங்கே நடந்தது? என்பது குறித்து விசாரணை நடைபெறும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மதுரையில் பாதுகாப்பு இல்லாமல் கேள்வித்தாள்கள் கொண்டு செல்லப்பட்டது சர்ச்சையான நிலையில் இந்த சம்பவத்தால் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## திருப்புவனம் காவலாளி
# அஜித்குமார் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் இழப்பீடு: ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு

**மதுரை, ஜூலை 23-**

திருப்புவனம் அஜித்குமார் குடும்பத்திற்கு ரூ. 25 லட்சம் இழப்பீடு வழங்க மதுரை ஐகோர்ட்டு கிளை உத்தரவிட்டுள்ளது.



சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளியம்மன் கோவிலில் தரிசனம் செய்ய வந்த நிகிதா என்ற பெண், கோவில் காவலாளி அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்தார். அதன்பேரில் விசாரணைக்கு அஜித்குமாரை அழைத்துச் சென்ற போலீசார், கடந்த மாதம் 28ம் தேதி அவரை அடித்துக்கொன்றனர். இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் அஜித்குமாரை அடித்துக்கொன்ற 5 போலீசார் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கு சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

அஜித்குமார் போலீசாரால் தாக்கப்பட்டது தொடர்பான வீடியோ காட்சிகள் அடிப்படையில் ஐகோர்ட்டு மதுரை கிளை தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டு வருகிறது. இதில், உயிரிழந்த அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு இதுவரை என்ன உதவி செய்துள்ளது? என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய கோர்ட்டு உத்தரவிட்டது. இந்நிலையில், இந்த வழக்கு ஐகோர்ட்டு மதுரை கிளை முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது ஆஜரான அரசு தரப்பு வழக்கறிஞர், அஜித்குமார் குடும்பத்தினருக்கு இடைக்கால நிவாரண நிதியாக 7.50 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. அஜித்குமாரின்சகோதரர் நவீன்குமாருக்கு அரசு வேலை வழங்கியுள்ளது' என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், இந்த இடைக்கால நிவாரணம் போதுமானதாக இல்லை என கூறினர். மேலும், அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு இடைக்கால நிவாரணமாக ரூ. 25 லட்சத்தை தமிழக அரசு வழங்க வேண்டும். கூடுதல் இழப்பீடு தேவைப்பட்டால் மனுதாரர் சம்பந்தப்பட்ட கோர்ட்டை அணுகி நிவாரணம் பெற்றுக்கொள்ளலாம்' என்றனர். மேலும், இந்த வழக்கு விசாரணை அடுத்த மாதம் 28ம் தேதிக்கு ஒத்தி வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# கூட்டணியில் இணைய இ.பி.எஸ். அழைப்பு: விஜய், சீமான் நிராகரிப்பு

**சென்னை, ஜூலை 23-**

கூட்டணியில் இணையுமாறு எடப்பாடி பழனிசாமி விடுத்த அழைப்பை த.வெ.க. தலைவர் விஜய்யும், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானும் நிராகரித்துள்ளனர்.



தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருக்கும் சூழ்நிலையில் தமிழக தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்க தொடங்கி விட்டது. அரசியல் கட்சிகள் இடையே கூட்டணி பேச்சுவார்த்தை திரைக்கு பின்னும், முன்னும் தொடங்கி உள்ளன.

இந்நிலையில் கூட்டணியில் சேர சீமான் மற்றும் விஜய்க்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார். இதுதொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், 2026-ல் தமிழக மக்கள் ஒற்றைக் கட்சி ஆட்சியை மட்டுமே எதிர்பார்க்கிறார்கள். தி.மு.க.வை தோற்கடிக்க அனைத்து ஒத்த எண்ணம் கொண்ட கட்சிகளும் அ.தி.மு.க.வுடன் கைகோர்க்க வேண்டும். ஒத்த கருத்துடைய கட்சிகள் எங்களுடன் கூட்டணிக்கு வரலாம் என்ற கருத்து விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சிக்கு பொருந்தும். இதுவரை த.வெ.க.வுடன் எந்த பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை என்று கூறினார். இது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், தாங்கள் கூட்டணியில் இணையுமாறு அழைத்த எடப்பாடி பழனிசாமி அழைப்பை த.வெ.க. தலைவர் விஜய்யும், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானும் நிராகரித்துள்ளனர்.

த.வெ.க. சார்பில் வெளியிடப்பட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், ''மாற்றத்தை விரும்பும் தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், மக்கள் விரும்பும் முதல்வர் வேட்பாளர், வெற்றித் தலைவர் விஜய் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம், மிகப் பெரிய வெற்றியைப் பெற்று, புதிய வரலாறு படைக்கும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி அழைப்பு குறித்து சீமான் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில், ''தேர்தலுக்காக கொள்கைகளை விடுத்து கூட்டணி அமைத்த எத்தனையோ கட்சிகள் காணாமல் போயுள்ளன. நாங்கள் என்றைக்குமே தனித்து தான் போட்டியிடுவோம். தீமையை வைத்து தீமையை எப்படி அழிக்க முடியும்?. தமிழகத்தில் தேசியக் கட்சிகள் எதற்காக? என்று கூறினார்.

இதன்மூலம் கூட்டணியில் சேர எடப்பாடி பழனிசாமி விடுத்த அழைப்பை இரு கட்சித் தலைவர்களும் நிராகரித்துள்ளனர்.

# அச்சுதானந்தன் உடலுக்கு பினராயி விஜயன் அஞ்சலி



**திருவனந்தபுரம், ஜூலை 23-**

கேரள முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் உடலுக்கு பினராயி விஜயன் உள்ளிட்ட தலைவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

கேரள முன்னாள் முதல்வர் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரான வி.எஸ். அச்சுதானந்தன் நேற்று முன்தினம் காலமானார்.

அவருக்கு வயது 101. வயது முதிர்வால் 2019-ம் ஆண்டு முதல் அரசியலில் இருந்து ஒதுங்கியே இருந்த அவருக்கு, கடந்த ஜூன் மாதம் 23-ந்தேதி திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. இதனால், திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் சிகிச்சை பலனின்றி, நேற்று முன்தினம் பிற்பகல் 3.20 மணிக்கு காலமானார்.

இந்நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை அவரது உடல், பொதுமக்கள் அஞ்சலிக்காக தலைமை செயலக தர்பார் அரங்கில் வைக்கப்பட்டு இருந்தது.. இன்று (புதன்கிழமை) காலையில் ஆலப்புழை மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு அலுவலகத்தில் பொதுமக்கள், தொண்டர்கள் இறுதி அஞ்சலிக்காக உடல் வைக்கப்பட்டு அரசு மரியாதையுடன் ஆலப்புழை சுடுகாட்டில் தகனம் செய்யப்படுகிறது.

மறைந்த வி.எஸ்.அச்சுதானந்தனுக்கு வசுமதி என்ற மனைவியும், அருண்குமார் என்ற மகனும், வி.வி. ஆஷா என்ற மகளும் உள்ளனர். அச்சுதானந்தனின் மறைவையொட்டி கேரளாவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பொது விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. மேலும் 3 நாள் அரசு முறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

இந்நிலையில், கேரள முதல்வர் பினராயி விஜயன், முன்னாள் எம்.பி. மற்றும் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரான பிருந்தா காரத் மற்றும் பிற தலைவர்கள் அவருடைய உடலுக்கு நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## திருவனந்தபுரத்தில் இருந்து
# ஒரு மாதத்துக்கு பிறகு புறப்பட்ட பிரிட்டிஷ் நாட்டு போர் விமானம்



**திருவனந்தபுரம், ஜூலை 23-**

கடந்த ஜூன் 14 முதல் திருவனந்தபுரம் சர்வதேச விமானநிலையத்தில் பழுதாகி நின்ற பிரிட்டிஷ் விமானப்படையின் எப்-35 ரக போர் விமானம், பழுது நீக்கப்பட்டு நேற்று (ஜூலை 22) அங்கிருந்து புறப்பட்டது.

பிரிட்டிஷ் விமானப்படைக்கு சொந்தமான லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனம் தயாரித்த 5ஆம் தலைமுறை ஸ்டெல்த் விமானமான எப்-35 ரக போர் விமானம், ஜூன் 14 ஆம் தேதி அன்று திருவனந்தபுரம் விமான நிலையத்தில் எரிபொருள் குறைவாக இருந்ததால் அவசரமாக தரையிறங்கியது. அதன்பின்னர் இந்த விமானத்தில் பழுது ஏற்பட்டதால், அதனை பழுது நீக்கும் முயற்சிகள் தொடர்ந்து தோல்வியடைந்தன. இந்த விமானத்தின் இறக்கைகளை பிரித்து ஜம்போ விமானத்தில் ஏற்றிச் செல்வதிலும் சிரமங்கள் இருந்தன. இதனால் பிரிட்டிஷ் விமான பொறியாளர்கள் குழு, ராயல் விமானப்படையின் ஏர்பஸ் ரக சரக்கு விமானத்தில் எப்-35 விமானத்தை பழுது பார்ப்பதற்கு உபகரணங்களுடன் ஜூலை 6 அன்று திருவனந்தபுரம் வந்தடைந்தனர்.

ரூ.924 கோடி மதிப்பிலான இந்த விமானம், பழுது பார்க்கும் மையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அதை சரி செய்யும் பணியில் பிரிட்டிஷ் பொறியாளர்கள் ஈடுபட்டனர். இரண்டு வாரங்களுக்கும் மேலாக நீடித்த பராமரிப்புப் பணிகளை முடித்த பொறியாளர்கள், பழுதுபார்க்கும் மையத்திலிருந்து விமானத்தை நேற்று முன்தினம் வெளியே எடுத்தனர்.

இந்த நிலையில், பிரிட்டிஷ் விமானப்படை விமானம் நேற்று திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டது. அந்த விமானம் ஆஸ்திரேலியாவில் உள்ள டார்வினுக்கு செல்லும் என தகவல் தெரிவிக்கப்பட்டது.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# இந்தியா வந்தது நவீன ரக அப்பாச்சி ஹெலிகாப்டர்

**புதுடில்லி, ஜூலை 23-**

அமெரிக்காவின் அதிநவீன போர் ரக அப்பாச்சி ஹெலிகாப்டர் நேற்று இந்தியா வந்து சேர்ந்தது.

உபி., மாநிலம் ஹிண்டன் விமானபடை தளத்தில் வந்து இறங்கியது. இன்னும் 2 நாட்களில் ராணுவத்திடம் ஒப்படைக்கப்படும். ஒரு நிமிடத்தில் பல ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சென்று 128 இலக்குகளை தாக்கும்.

அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்ட அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்களை அமெரிக்கா தயாரித்து வருகிறது. 2015ம் ஆண்டு செப்டம்பரில் அமெரிக்காவுடனான ரூ.13,952 கோடி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய விமானப்படையில் 22 அப்பாச்சி ஹெலிகாப்டர்களும், ராணுவத்தில் 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்களும் பயன்பாட்டில் உள்ளன. உலகின் அதிநவீன போர் ஹெலிகாப்டர்களில் சக்தி வாய்ந்தது AH-64E என்னும் அப்பாச்சி ராணுவ ஹெலிகாப்டர். இதை அமெரிக்காவின் போயிங் நிறுவனம் தயாரிக்கிறது. கூடுதலாக மேலும் 6 ஹெலிகாப்டர்களை வாங்க, கடந்த 2020ம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ரூ.5,171 கோடியில் 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில், முதற்கட்டமாக, 3 அப்பாச்சி ரக போர் ஹெலிகாப்டர்கள் நேற்று ஜூலை 22ம் தேதி வந்து சேர்ந்தது. அமெரிக்கா, இஸ்ரேல், பிரிட்டன், எகிப்து ஆகிய நாடுகள் இந்த அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் பயன்படுத்த வருகிறது. தற்போது இந்தியாவும் தனது வலிமையை பெருக்கி உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



அரசியலுக்கு வந்து ஊழல் செய்து 1,000 கோடி ரூபாய் சம்பாதித்தேன் என்று சொல்வது தவறு. உண்மையாக இருந்தால் அதை நிரூபிக்க வேண்டும். நிரூபித்தால் அரசியலில் இருந்து நான் விலகத் தயார். அதேசமயம் நிரூபிக்க தவறினால் பானு பிரகாஷ் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு அரசியலை விட்டு விலக தயாரா?.

**- ரோஜா**



நான் இருக்கும் வரை பா.ஜ.க. வெல்லாது, வளராது. இதுபோல் வேறு யாராவது சொல்வார்களா? பா.ஜ.க .வந்துவிடும் என குடுகுடுப்பைக்காரர்கள் போல் கூறுகின்றனர். பா.ஜ.க.வுக்கு நான் 'பி' டீம் என்றால், தி.மு.க. 'ஏ' டீம். தமிழகத்தில் பெரிய கூட்டணி என் கூட்டணிதான். 8 மாதம் பொறுத்திருக்கவும். அதுபற்றி மாநாட்டில் அறிவிக்கப்படும்.

**- சீமான்**



தமிழக அரசே தற்போது தனியார் பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகை வழங்கவும், காயமடைந்தவர்களுக்கு உதவித்தொகை வழங்கவும் வேண்டும். இனிமேல் வெடி விபத்துகள் ஏற்படாமல் இருக்க, தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆய்வு மூலம் மேற்கொள்ள வேண்டும்.

**- ஜி.கே.வாசன்**



துணை ஜனாதிபதி மற்றும் மாநிலங்களவைத் தலைவரின் திடீர் ராஜினாமா புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அதிர்ச்சியளிக்கிறது. அவர் நலம் பெற வாழ்த்துகிறோம், ஆனால் அவர் தனது முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். நாட்டின் நலனுக்காக பிரதமர், ஜெகதீப் தங்கரின் மனதை மாற்றச் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

**- ஜெய்ராம் ரமேஷ்**

# அருப்புக்கோட்டை அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்



அருப்புக்கோட்டை, ஜூலை 23-


அருப்புக்கோட்டை அருகே ஆத்திப்பட்டியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். இந்த முகாமில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு காண்பதற்காக வருவாய்த்துறை, வேளாண்மை துறை, மின்வாரியத் துறை, காவல் துறை உள்ளிட்ட 15 துறைகளின் கீழ் தனித்தனியாக ஸ்டால்கள் அமைக்கப்பட்டு பொது மக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

இந்த இந்த முகாமில் அமைக்கப்பட்ட ஸ்டால்களில் வருவாய் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் ஆய்வு செய்து அதிகாரிகளிடம் பொது மக்களிடம் பொறுமையாக இருந்து கோரிக்கையாக மனுக்களை பெற்று கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இந்த முகாமில் அருப்புக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமேஸ்வரி, காஜாமைதீன், தாசில்தார் செந்தில் வேல், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், ஒன்றிய செயலாளர் பாலகணேஷ், பொன்ராஜ், முன்னாள் நகர மன்ற தலைவர் சிவபிரகாசம் துணை தலைவர் பழனிச்சாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அழகு ராமானுஜம், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் நத்தம் சட்டமன்ற தொகுதி திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம், அடியனூத்து ஊராட்சி குருசடி அந்தோனியார் நகர் புனித அருளானந்தர் ஆலய அர்ச்சிப்பு திருவிழாவை முன்னிட்டு அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளருமான முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் ஆலோசனையின் படி மாநில அம்மா பேரவை இணைச் செயலாளர் ஆர்.வி.என்.கண்ணன், திண்டுக்கல் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ.முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வத்தலகுண்டில்
# மின் நுகர்வோர் குறைதீர் கூட்டம்



வத்தலகுண்டு, ஜூலை 23-

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் நுகர்வோர் மின் பயன்பாட்டாளர்களின் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மேற்பார்வை பொறியாளர் பிரபாகரன் தலைமை தாங்கினார் செயற்பொறியாளர் கருப்பையா முன்னிலை வைத்தார். இக் கூட்டம் வத்தலகுண்டு மேற்கு கிழக்கு நகரம் நிலவை மேற்கு கிழக்கு கொடைக்கானல் மேற்கு கிழக்கு பிரிவுகள் சித்தையன் கோட்டை அய்யம்பாளையம் காமராஜபுரம் போன்ற கிராம பகுதிகளுக்கு உண்டான குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் உதவி செயற்பொறியாளர்கள் மேற்கு முகமது யூசுப், கிழக்கு பிரகதீஷ் கண்ணன். நிலக்கோட்டை ஜெயன் கொடைக்கானல் மேத்யூ, உதவி பொறியாளர்கள் வத்தலகுண்டு நகர் ரமேஷ் மேற்கு அழகு பாண்டி விருவீடு பழனிவேல் முருகன் கிழக்கு ரமேஷ் அய்யம்பாளையம் செல்ல காமாட்சி சித்தையன் கோட்டை மாணிக்கம் அம்மைய நாயக்கனூர் மலர்க்கொடி நிலக்கோட்டை டவுன் சந்திரகாந்த் நிலக்கோட்டை கிராம பகுதி செந்தில் ராஜா ராமராஜபுரம் பகுதி ராதாகிருஷ்ணன் கொடைக்கானல் கிழக்கு காயத்ரி மேற்கு செந்தில் கொடைக்கானல் கிராமம் பகுதி குமார் தாண்டிக்குடி ஆனந்த் பண்ணைக்காடு குபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்,

பொதுமக்கள் தாங்கள் பகுதியில் ஏற்படும் மின்சார சம்பந்தமான குறைகளுக்கு நிவர்த்தி செய்து வைத்தனர். கூட்டத்தில் பெயர் மாற்றம் குறித்து வந்த மனுக்களுக்கு உடனே தீர்வு செய்யப்பட்டது, குறைந்த அழுத்தம் உள்ள பகுதிகளில் டிரான்ஸ்பாரம் மாற்றுவது குறித்தும் மனுக்கள் புறப்பட்டது. முடிவில் வத்தலகுண்டு நகர் பகுதி உதவி பொறியாளர் ரமேஷ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



மதுரை மாநகர் மாவட்ட வடக்கு 5-ம் பகுதி 31 வது வடக்கு வட்ட அ.தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் அ.பா.தினேஷ்அலெக்ஸ்சாண்டர் தலைமையிலும், பகுதி செயலாளர் வழக்கறிஞர் கே. அசோகன் முன்னிலையிலும் கரும்பாலை நடுநிலைப்பள்ளி அருகில் நடைபெற்ற தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார்.இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார்,இஷிகா நாச்சியார்,வி.பி.ஆர். செல்வகுமார், பேராசிரியர் ஜெயபால், ஜெ.மாணிக்கம், ஆர்.பாஸ்கரன், விநாயகமூர்த்தி, சுசுந்தி அசோக் மற்றும் ஜெ.சுந்தர்,வி.எஸ்.பாண்டியராஜன், கேகே நகர் ஆர்.மணி, மானகிரி தனபால், கோமதிபுரம் குமார், மேலமடை ராமச்சந்திரன், சுப்பிரமணி, பாக்கியலட்சுமி, சித்தம்மாள், ஜெயராமன், கருமாரி, கிருஷ்ணா பாண்டி, அய்யனார், பாலா, ஆனந்த்,கந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆண்ட்ஸ்லைட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் டிஸ்டிரிப்யூட்டர்கள் சந்திப்பு மற்றும் விருதுகள் வழங்கும் விழா சேலத்தில் நடைபெற்றது

சென்னை, ஜூலை 23-

பிரபல ஒளி தீர்வுகள் வழங்கும் ஆண்ட்ஸ்லைட் பிரைவேட் லிமிடெட் சமீபத்தில் சேலம் மாவட்டம், ஏற்காட்டில் பிரம்மாண்ட டிஸ்டிரிப்யூட்டர் சந்திப்பு மற்றும் விருதுகள் விழாவை நடத்தியது.

மாநிலம் முழுவதும் இருந்து சுமார் 25 சிறந்த டிஸ்டிரிப்யூட்டர்கள் இதில் பங்கேற்றனர் மற்றும் நிறுவன வளர்ச்சியில் தங்கள் பங்களிப்புக்காக பாராட்டப்பட்டனர். விழாவில் ஆண்ட்ஸ்லைட் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி காட்சியளித்தது. தரம், புதுமை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவையில் நிறுவனம் மிகுந்த கவனம் செலுத்துகிறது.

இந்த நிகழ்வு தர்மபுரியைச் சேர்ந்த சரவணன் (மோர்கா தயாரிப்புகள் பிரைவேட் லிமிடெட்) மற்றும் சேலத்தைச் சேர்ந்த தங்கமணி (சுதா மார்க்கெட்டிங்) ஆகியோர் இணைந்து ஒருங்கிணைத்தனர். முக்கிய விநியோகஸ்தர்கள், பங்குதாரர்கள் மற்றும் நிறுவன ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

விழாவில் பல பிரிவுகளில் சிறந்த செயல்திறன் காண்பித்த 24-25 டிஸ்டிரிப்யூட்டர்கள் விருதுகளை பெற்றனர். சிறந்த விற்பனை விருது ஹோசூரைச் சேர்ந்த லெட்சுமி மார்க்கெட்டிங்-க்கு வழங்கப்பட்டது. நிறுவன இயக்குநர்கள், நமது வளர்ச்சிக்குக் காரணமாக டிஸ்டிரிப்யூட்டர்கள் மற்றும் பங்குதாரர்களின் விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பே அமைகிறது. எதிர்கால இலக்குகளை எட்ட அவர்களுடன் இணைந்து செயல்பட ஆவலாக உள்ளோம் என்றனர்.

ஆண்ட்ஸ்லைட் நிறுவனம் ஸ்பாட் புக்கிங் மூலம் சிறப்பு சலுகைகளை வழங்கியது. ஆண்டுக்கான விற்பனை இலக்குகளும் டிஸ்டிரிப்யூட்டர்களிடம் அறிவிக்கப்பட்டது. நிறுவனத்தின் முயற்சிகள் மற்றும் பாராட்டுகள் அனைவராலும் விருதுகள் பெற்றது.

ஆண்ட்ஸ்லைட் தனது முன்னணி நிலையை மேலும் வலுப்படுத்தி, புதுமைகள் மற்றும் தரமான தயாரிப்புகளை வழங்குவதே அதன் நோக்கம் என தெரிவித்தது.

# திருமங்கலத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: மாவட்டச்செயலாளர் மு.மணிமாறன்-சேர்மன் பங்கேற்பு



திருமங்கலம்,ஜூலை 23-

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் நேற்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், நகராட்சி சேர்மன் மு.ரம்யா முத்துக்குமார் பங்கேற்று நிகழ்வுகளை நேரில் பார்வையிட்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் சீர்மிகு திட்டங்களின் திட்டங்களில் ஒன்றான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்கள் தமிழகம் முழுவதிலும் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஜூலை 15-ம் தேதி துவங்கி நவம்பர் மாதம் வரை பத்தாயிரம் சிறப்பு முகாம்களை நடத்திட தமிழக அரசு திட்டமிட்டு உள்ளது.இந்த முகாம்களில் ஜாதிச் சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம், பென்ஷன் தொடர்பான மாற்றங்கள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பம், மருத்துவ காப்பீடு அட்டை பெறுவது, ஆதார் அட்டையில் திருத்தங்கள், ரேஷன் அட்டையில் மாற்றம் என பல்வேறு சேவைகளை பொதுமக்கள் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் சிவலட்சுமி திருமண மகாலில் இரண்டாவது கட்டமாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமிற்கு நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார் தலைமை வகித்தார்.வட்டாட்சியர் சுரேஷ் பிரெடரிக் கிளமென்ட், நகராட்சி ஆணையாளர் அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகராட்சி துணை சேர்மன் ஆதவன் அதியமான், பொறியாளர் ரத்தினவேல் ஆகியோர் வரவேற்றனர்.

இதையடுத்து 4,6,7-வது வார்டுகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த சிறப்பு முகாமில் மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் முகாமில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு பொதுமக்களின் மனுக்கள் மீது விரைவான நடவடிக்கை எடுத்திடுமாறு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் திருமங்கலம் நகர கழகச் செயலாளர் ஸ்ரீதர், நகர் கழக பொருளாளர், கவுன்சிலர் சின்னச்சாமி,கவுன்சிலர்கள் ஜஸ்டின் திரவியம், வினோத், கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மதன்குமார், கட்சி நிர்வாகிகள் செல்வம், ரவி,கவி ஸ்ரீ தினேஷ் மற்றும் நகராட்சி அலுவலர்கள், அரசின் பல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் புதிய ரேஞ்ச் ரோவர் வெலார் ஆட்டோ பயோகிராஃபி: டிசைன், புதுமை, நவீன சொகுசுடன் அறிமுகம்

சென்னை, ஜூலை 23-

ரேஞ்ச் ரோவர் நிறுவனம், தனது பிரீமியம் எஸ்யுவி வரிசையில் புதிய வெலர் ஆட்டோபயோகிராஃபி மாடலை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. மிடுக்கான ரிடக்டிவ் டிசைன் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் அதிநவீன உட்புற அம்சங்களுடன், இந்த மாடல் ரேஞ்ச் ரோவரின் சொகுசு வாரிசை மேலும் உயர்த்துகிறது.இது இரண்டு என்ஜின் தேர்வுகளுடன் வருகிறது. 183.9 கேடபிள்யூ திறனுடன் கூடிய பி 250 பெட்ரோல் என்ஜின் மற்றும் 150 கேடபிள்யூ திறனுடன் கூடிய டி200 மைல்டு ஹைபிரிட் டீசல் என்ஜின். இவை இரண்டுமே இந்தியாவின் பல்வகை சாலைத்தரத்திற்கேற்ப சிறந்த செயல்திறனை வழங்குவதாகும்.

வெலார் ஆட்டோபயோகிராஃபி மாடல், பனோரமிக் ரூஃப், 20 இன்ச் அலாய் வீல்கள், மெரிடியன்™ 3டி சவுண்ட் சிஸ்டம், மற்றும் 20-வழி மசாஜ் இருக்கைகள் போன்ற பல சொகுசு அம்சங்களை கொண்டுள்ளது. மேலும் 3டி கேமரா, வேடு சென்சிங், ஏர் சஸ்பென்ஷன் போன்ற ஸ்மார்ட் டிரைவரிங் உதவிகளும் இதில் உள்ளன.இந்த புதிய மாடல் ரூ.89.90 லட்சம் (எக்ஸ்-ஷோரூம்) விலைக்கு விற்பனைக்குக் கிடைக்கிறது. அதன் துணை வேரியண்டான டைனமிக் எஸ்இ ரூ.84.90 லட்சம் விலையில் வழங்கப்படுகிறது.

# ஒப்போ இந்தியா, புதிய ரெனோ14சீரிஸ் மற்றும் பேட் எஸ்இ டேப்லட்டை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, ஜூலை 23-

ஒப்போ இந்தியா, மிக முக்கியமான தொழில்நுட்ப மேம்பாடுகளுடன் கூடிய புதிய ரெனோ14 மற்றும் ரெனோ14ப்ரோ மாடல்களை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது.3.5எக்ஸ் லாஸ்லெஸ் டெலிபோட்டோ கேமரா, 120எக்ஸ் டிஜிட்டல் ஜூம், அண்டர்வாட்டர் ஃபோட்டோ, மற்றும் தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய ஏஐ எடிட்டிங் அம்சங்கள் மூலம், இந்த மாடல்கள் புகைப்படக்கலை மற்றும் ப்ரொடக்டிவிட்டி துறையில் புதிய தரங்களை நிலைநிறுத்துகின்றன.

ரெனோ14ப்ரோ மாடல், இந்தியாவில் முதன்முறையாக மீடியாடெக் டைமென்சிட்டி 8450 சிப்செட்டை கொண்டுவருகிறது. 6200எம்ஏஎச் பேட்டரி,50டபிள்யூ வயர்லெஸ் சார்ஜிங், மேம்பட்ட கூலிங் சிஸ்டம் மற்றும் பிஜிஎம்ஐ போன்ற கேம்களில் சிறந்த செயல்திறன் ஆகியவையும் இதில் அடங்கும். இரு மாடல்களும், ஐபி66, ஐபி68, மற்றும் ஐபி69 சான்றிதழ்களுடன், நீர்தொட்டிகளிலும், கடும் சூழ்நிலைகளிலும் பாதுகாப்புடன் பயன்படுத்தக்கூடியவை.

ரெனோ14சீரிஸுடன் இணைந்து, ஒப்போ தனது புதிய பேட்எஸ்இ டேப்லட்டையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது 9,340எம்ஏஎச் பேட்டரி, 11 இன்ச் ஐ-கேர் டிஸ்ப்ளே, 33டபிள்யூ சூப்பர்வூக் சார்ஜிங் வசதி கொண்டது. குடும்ப பொழுதுபோக்கு, படிப்பு மற்றும் பயணங்களுக்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள பேட்எஸ்இ, டியுவி ரீன்லேண்ட்சான்றிதழ் பெற்ற கண் பாதுகாப்பு அம்சத்துடன் வருகிறது.

விலை விவரங்களாக,ரெனோ14ப்ரோ5ஜி ரூ.49,999 முதல் ரூ.54,999 வரை, ரெனோ145ஜி ரூ.37,999 முதல் ரூ.42,999 வரை கிடைக்கின்றன. ஒப்போ பேட்எஸ்இ ரூ.13,999 முதல் ரூ.16,999 வரையிலான விலையில் ஃப்ளிப்கார்ட், ஒப்போ ஆன்லைன் ஸ்டோர் மற்றும் பிராண்ட் அவுட்லெட்களில் வாங்கக்கூடியதாகும்.

# அ.தி.மு.க. கடல் அலை போல இருப்பதற்கு எடப்பாடியாரின் எழுர்ச்சி பயணமே சாட்சி

## எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் பெருமிதம்



மதுரை, ஜூலை 23-

இன்றைக்கு கடல் அலை போல அ.தி.மு.க. உள்ளது என்பதற்கு எடப்பாடியாரின் எழுர்ச்சி பயணமே ஒரு சாட்சியாக உள்ளது என்று தமிழக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் பெருமிதம் தெரிவித்துள்ளார். இது குறித்து தமிழக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

தமிழகத்தில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையிலும் சரி,ஓட்டு வங்கிகளும் சரி. அனைத்திலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் எம்.ஜி.ஆர்,அம்மா,எடப்பாடியார் ஆகியோர் காலங்களில் முதலிடத்தில் உள்ளது.கொட்டும் மழையில் ராபின்சென் பூங்காவில் அண்ணா உருவாக்கிய திமுகவில் உறுப்பினர் சேர்க்கையை இரண்டாம் இடத்தில் தான் உள்ளது. இதை ஒப்புக் கொண்டு தான் உறுப்பினர் சேர்க்கை உயர்த்த அரசு திட்டங்களை பயன்படுத்தி உறுப்பினர் சேர்க்கை மறைமுகமாக முயற்சி நடைபெற்று வருகிறது.ஆட்சியை வைத்துக் கொண்டு கட்சியின் எண்ணிக்கை ஸ்டாலின் உயர்த்த பார்க்கிறார்கள்.தோழமைக் கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் நாங்கள் இல்லாமல் திமுக ஆட்சி அமைக்க முடியுமா? என்று கேள்வி எழுப்ப ஆரம்பித்து விட்டார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்ற அசைத்துப் பார்க்கலாம் என்றெல்லாம் பல முயற்சிகள் திமுகவினர் எடுத்தார்கள். அதில் எம்.ஜி.ஆர்.காலத்திலே தோற்றுப் போய், அம்மா காலத்திலே தோற்று போய், இன்றைக்கு எடப்பாடியார் காலத்திலும் அந்த முயற்சியில் திமுக தலைவர்கள் தோற்றுப் போய் இருக்கின்றார்கள். அ.தி.மு.க.வில் வாக்கு வங்கி, தொண்டர்கள் எண்ணிக்கை கடல் போல் உள்ளது. கடல் பரப்பை கூட குறைத்து விடலாம் அ.தி.மு.க. பரப்பை குறைக்க முடியாது. ஆற்று நீர் கடலில் உள்வாங்கும் அதே போல எவ்வளவு தொண்டர்கள் வந்தாலும் அ.தி.மு.க. உள்வாங்கிக் கொள்ளும். வங்க கடல் போல அ.தி.மு.க. பரந்து விரிந்து மக்களுக்கு சேவை செய்து வருகிறது. இன்றைக்கு கடல் அலை போல அ.தி.மு.க. உள்ளது என்பதற்கு எடப்பாடியாரின் எழுர்ச்சி பயணமே ஒரு சாட்சியாக உள்ளது.வாக்காளர்களை 30 சதவீதத்தை கட்சி உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று ஸ்டாலின் உத்தரவு போட்டுள்ளார என்று சொன்னால் யாரைப் பார்த்து பயந்து உத்தரவு போடுகிறார்?

உங்களோடு ஸ்டாலின் இந்த திட்டத்தின் மூலமாக அங்கு தொலைபேசி எண்கள் கேட்பதெல்லாம் நீதிமன்றமே தடை செய்திருக்கிறது. ஆக அரசு இயந்திரத்தை பயன்படுத்தி உறுப்பினர்களை சேர்ப்பது என்பது இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு வழிமுறையாக நீதிமன்றமே இன்றைக்கு ஓடிபி நம்பர் போன்ற எல்லாம் வாங்கக்கூடாது என்று தற்காலிக தடை விதித்திருப்பதை நாம் பார்க்கின்றோம்.திமுக கட்சிக்காரர்கள் மக்கள் கட்டுப்பாடு இல்லை என்பது உண்மையாக உள்ளது. கோவை நெல்லை மேயர் மாற்றம், காரைக்குடி மேயரை உங்கள் கட்சிக்காரர்களே மாற்ற முயற்சிக்கிறார்கள் பல மாநகராட்சி இதே நிலை உள்ளது.மதுரையில் ஐந்து மண்டல தலைவர்கள்,நிலை குழு தலைவர்கள் ராஜினாமா செய்யப்பட்டு கைது படலமாக உள்ளது. இதுதான் திமுக ஆட்சியின் நிலையாக உள்ளது.ஊரிலே ஆட்டை காணோம், மாட்டை காணோம்.அண்டாவை காணோம், குண்டாவை காணோம் என்று தேடி நிலை மாறி இப்போது மனிதனுடைய கிட்னியை காணும் என்று இந்த அவல ஆட்சியிலே உள்ளது. ஏழை எளிய மக்களுடைய வறுமையை போக்க வேண்டிய அரசு இன்னைக்கு அந்த வறுமையை பயன்படுத்தி மக்களுடைய உடல் உறுப்பை திருடுகிற ஒரு நிலைமை அவல நிலையை பார்க்கிற போது இது வேதனையின் உச்சமாக இருக்கிறது

கட்சிக்காரர்கள் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் என்று 75 வருட கட்சி இன்றைக்கு உத்தரவு இடுவது என்பது திமுக அதள பாதாளத்தில் உள்ளது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டது. இனி எதிர்க்கட்சி அந்தஸ்து பெற முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது. இனியும் இந்த அரசு தேவை இல்லை என்று மக்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். இனியும் இந்த ஆட்சி தொடர்ந்தால் தமிழகத்தை ஆண்டவனால் கூட காப்பாற்ற முடியாது என மக்கள் தீர்க்கமாக முடிவில் உள்ளனர்.சட்டசபையில் எடப்பாடியாரின் உரிமை குரலை நெறித்து, நேரலையை துண்டித்து ஜனநாயக படுகொலை செய்த இந்த மக்கள் விரோத திமுக அரசுக்கு, பாடம் புகட்ட புகட்ட தான் எடப்பாடியாரின் எழுர்ச்சி பயணத்தில் மாபெரும் வரவேற்பை மக்கள் அளித்து வருகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## வெள்ளநாதன்பட்டியில்
# வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி

மேலூர், ஜூலை 23-

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், வெள்ளநாதன்பட்டியை சேர்ந்த வி.பிரபாகர் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவாக நடத்திய முதலாம் ஆண்டு மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி வெள்ளநாதன்பட்டியில் நடைபெற்றது.



இந்த போட்டியில் 16 அணியை சேர்ந்த மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் சிவகங்கை, திண்டுக்கல், திருச்சி, மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தம் 16 காளைகள் கலந்து கொண்டன. போட்டியில் பங்கேற்ற அனைத்து காளையின் உரிமையாளர்களுக்கும், வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கும் பிரிட்ஜ், எல்இடி டிவி, பீரோல், அண்டா, குத்து விளக்கு, கட்டில், மற்றும் ரொக்க பரிசு தொகை வழங்கப்பட்டது. பரிசுகளை அனைத்தும் வெள்ளநாதன் பட்டி செந்தில் வீரணன்அம்பலம் அவரது வழங்கினார். மஞ்சுவிரட்டு போட்டியை காண வந்த அனைவருக்கும் அன்னதானத்தை விழா குழுவினர் வழங்கினர்.

# திருமங்கலம் நகரில் இறையன்பு நூலகத்தின் 14-வது கிளையாக மகளிர் நூலகம் திறப்பு




**திருமங்கலம், ஜூலை 23-**
திருமங்கலம் நகரில் சிறப்புடன் செயல்பட்டு வரும் இறையன்பு நூலகத்தின் 14வது நூலகமாக இறையன்பு மகளிர் கிளை நூலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

திருமங்கலம் நகரில் பொதுமக்கள், மாணவ, மாணவிகள் மற்றும் போட்டித் தேர்வர்கள் பயன் பெற்றிடும் வகையில் இறையன்பு நூலகம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இங்கு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிடும் மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இறையன்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் பார்த்தசாரதியின் சீரிய முயற்சியால் திருமங்கலம் பகுதியின் பல்வேறு இடங்களில் 13 கிளை நூலகங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் அறங்காவலர் பார்த்தசாரதியின் புதுமையான முயற்சியில் 14வது கிளை நூலகமாக மகளிர் நூலகம் பெரியகால நகரில் அமைக்கப்பட்டது அதன் திறப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்த மகளிர் நூலக திறப்பு விழாவிற்கு முன்னாள் அரசு மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பரிமளா போஸ் தலைமை வகித்தார். ஸ்ரீபூ கலாசார மையம் நிறுவனர் மற்றும் அறிவகம் ஒருங்கிணைப்பாளர் நிஷாராணி, அன்னை வசந்தா அறக்கட்டளை தலைவர் அமுதா பழனிமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அரசு நல் நூலகர் மலர்விழி, முதுநிலை ஆசிரியர் சிந்தியா, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் கிளை தலைவர் பாண்டிச்செல்வி, ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசினார்கள். மாணவிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்ட இவ்விழாவினை இறையன்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் அறங்காவலர் சுபா அபிராமி தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக விழாவில் பங்கெடுத்த அனைவருக்கும் முது முனைவர் இறையன்பு எழுதிய நூல்கள் வழங்கப்பட்டன. இதனை தொடர்ந்து 100 நூல்கள் முதல் கட்டமாக மகளிர் நூலகப் பொறுப்பாளர் சுபா இராசவிடம் வழங்கப்பட்டது. விழாவின் நிறைவாக ஆமினா பேகம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## போதை விழிப்புணர்வு

**மதுரை, ஜூலை 23-**
மதுரை ஆரப்பாளையம் பகுதியில் உள்ள புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு போக்குவரத்து விழிப்புணர்வு மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வினை போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி வழங்கினார். இதில் குறிப்பாக பள்ளி மாணவர்கள் பேருந்து பயணத்தின் பொழுது எவ்வாறு செல்ல வேண்டும் என்பதனை பற்றியும் எவ்வாறு செல்லக்கூடாது என்பதனை பற்றியும் பேருந்து பயணத்தின் பொழுது படிக்கட்டில் நின்று கொண்டு தூங்கிக்கொண்டு சென்றால் ஏற்படக்கூடிய விபரீதம் பற்றியும் அதன் பின்னர் அவரது குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலை பற்றியும் உணர்வு பூர்வமாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியின் இறுதியில் அனைத்து மாணவர்களும் போக்குவரத்து விதிகளை பின்பற்றி ஒழுக்கமாக கவனமாக செல்வோம் என்று உறுதிமொழி மேற்கொண்டனர் இந்நிகழ்ச்சியில் புனித பிரிட்டோ மேல்நிலை பள்ளியின் தலைமை ஆசிரியர் அருட்தந்தை செல்வம் கரிமேடு போக்குவரத்து சார்பு ஆய்வாளர்கள் சந்தான குமார், ஆண்டவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் மறைவு: அனைத்து கட்சி சார்பில் மவுன ஊர்வலம்



**மதுரை, ஜூலை 23-**
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் கேரளா மாநில முன்னாள் முதலமைச்சர் வி. எஸ். அச்சுதானந்தன் 102 உடல் நல குறைவால் திங்களன்று காலமானார் அவரது மறைவை ஒட்டி மதுரை மாநகர் புறநகர் சார்பில் மௌன அஞ்சலி ஊர்வலம் மாநில குழு உறுப்பினர் இரா. விஜயராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் திமுக, காங்கிரஸ் சிபிஐ, மதிமுக, சிபிஐ (எம்எல்), பார்வர்ட் பிளாக், தமமுக சொல்லிட்டு பல்வேறு அமைப்புகள் இந்த மௌன ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதில் சிபிஎம் மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம், கே. சாமுவேல் ராஜ், மாநில குழு உறுப்பினர் எஸ். பாலா, மாவட்ட செயலாளர் மதுரை மாநகர் மா. கணேசன், புறநகர் கே. ராஜேந்திரன், திமுக அவைத்தலைவர் ஒச்சுபாலு, காங்கிரஸ் மாவட்ட செயலாளர் வி. கார்த்திகேயன், மதிமுக சட்டமன்ற உறுப்பினர் மு. பூமிநாதன், மாவட்ட செயலாளர் முனியசாமி, சிபிஐ மாவட்ட செயலாளர் கே. கே. சாமி, ஃபார்வர்டு பிளாக் சிவபாண்டியன், சிபிஐ (எம்எல்) மாவட்ட செயலாளர் மதிவாணன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் இப்ராஹிம், விசிக மாநகர் மாவட்ட செயலாளர் ப. ரவிக்குமார் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து மகபூப்பாளையம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு அலுவலகத்தில் இருந்து ஜின்னா திடல் வரை நடைபெற்றது இறுதியாக ஜின்னா திடலில் வைக்கப்பட்டிருந்த தோழர் வி. எஸ். அச்சுதானந்தன் அவர்கள் உருவப் படத்திற்கு மலர் வளையம் வைத்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினார்கள் தொடர்ந்து நடைபெற்ற புகழஞ்சலி கூட்டத்தில் தலைவர்கள் வி. எஸ். அச்சுதானந்தன் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தினர்கள்.

# ஆறு விதமான பேட்டரி வகைகளில் லோ-ஸ்பீட் எலக்ட்ரிக் ஸ்கூட்டர்கள் அறிமுகம்

**சென்னை, ஜூலை 23-**
இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் மின்சார இரு சக்கர வாகன பிராண்டுகளில் ஒன்றான ஜீலியோ E மொபிலிட்டி (*ZELIO E Mobility*), அதன் பிரபலமான குறைந்த வேக மின்சார ஸ்கூட்டரான *Gracy+* இன் ஃபேஸ்லிஃப்ட் (புதிய வடிவமைப்புடன் வரும்) மாடலை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. இன்றைய நகர்ப்புற பயணத்திற்கு ஏற்ப, இந்த புத்தம் புதிய *Gracy+* ஸ்கூட்டரானது - மேம்பட்ட செயல்திறன், சௌகரியமான பயணம், மற்றும் மாணவர்கள், வேலைக்கு செல்லும் நிபுணர்கள் மற்றும் இருசக்கர வாகனப் பணியாளர்களுக்கு ஏற்ற அனைத்து அத்தியாவசிய அம்சங்களையும் வழங்குகிறது. ஸ்மார்ட்டான, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் எளிதாக அனைவருக்கும் சாத்தியமான மின்சார வாகனங்களைத் தர வேண்டும் என்கிற ZELIO நிறுவனத்தின் இலட்சியத்திற்கு, புதிய தோற்றத்தில் வரும் இந்த *Gracy+* வாகனம் ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது.

பல்வேறு நகர்ப்புற பயண எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதமாக புதிய *Gracy+* ஸ்கூட்டர் ஆறு விதமான பேட்டரி வேரியன்ட்களில் கிடைக்கிறது: லித்தியம்-அயான் பேட்டரி ரகம்: *60V/30AH*; விலை ரூ.*65,000*; பயண வரம்பு: *110 km, 74V/32AH*; விலை ரூ.*69,500*; பயண வரம்பு: *130 km*. ஜெல் பேட்டரி ரகம்: *60V / 32AH*; விலை ரூ.*54,000*; பயண வரம்பு: *80 km, 60V / 42AH*; விலை ரூ.*58,000*; பயண வரம்பு: *100km, 72V / 32AH*; விலை ரூ.*56,500*; பயண வரம்பு: *100 km, 72V/42AH*; விலை ரூ.*61,000*; பயண வரம்பு: *130 km*

இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த *ZELIO E* மொபிலிட்டி நிறுவனத்தின், இணை நிறுவனரும், நிர்வாக இயக்குனருமான திரு. குணால் ஆர்யா, அவர்கள், "இந்தியாவின் நகர்ப்புற தேவைகளுக்கு ஏற்ப மின்சார வாகனங்களை மாற்ற வேண்டும் என்கிற எங்களது இலட்சியத்திற்கு, *Gracy+* ஒரு நற்சான்றாக இருக்கும். வாகனத்தின் தரம் அல்லது ரைடர் அனுபவத்தில் சமரசம் செய்யாமல், சிக்கனமான விலையில் கிடைக்கும் வகையில் இதன் வடிவமைப்பு, செயல்திறன் மற்றும் பயண வரம்பினை நாங்கள் மேம்படுத்தியுள்ளோம்.

# கவனமீர்க்கும் சுபா சுப்ஸின் புதிய கேம்பைன் 'சமஜ் கே பாஹர்'!

**மதுரை, ஜூலை 23-**
பெர்ஃபெட்டி வான் மெல்லேவின் வீட்டில் இருந்து வந்த ஐகானிக் மற்றும் விளையாட்டுத்தனமான கன்ஃபெக்ஷனரி பிராண்டுகளில் ஒன்றான சுபா சுப்ஸ், அதன் தனிச்சிறப்பு இனிப்பு மற்றும் புளிப்பு சுவையின் விசித்திரமான தாக்கத்தை உயிர்ப்பிக்கும் ஒரு புதிய பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. புத்துணர்ச்சியூட்டும் புதிய *TVC* உடன், இனிப்பு மற்றும் புளிப்பு கலவையானது சாதாரணமானவற்றை எவ்வாறு தூய வேடிக்கையின் குழப்பமாக மாற்றும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த பிரச்சாரம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த டிவிசி, நண்பர்கள் குழு ஒன்று கேரம் விளையாடும் ஒரு சாதாரண சூழலில் தொடங்குகிறது. ஆனால் அவர்கள் சுபா சுப்ஸ் பெல்ட்ஸைக் கடிக்கும்போது, பழக்கமான விளையாட்டு நகைச்சுவையான கணிக்க முடியாததாக மாறுகிறது. இவை அனைத்தும் பிரச்சாரத்தின் மையக் கருத்தைப் படம்பிடிக்கும் ஒரு தருணமாக உருவாகின்றன, "சமஜ் கே பாஹர் ஹை, ஜைஸே சுபா சுப்ஸ் *sweet* ஹை யா *sour* ஹை"

இந்த பிரச்சாரம் குறித்து பேசிய பெர்ஃபெட்டி வான் மெல்லே இந்தியாவின் சந்தைப்படுத்தல் இயக்குநர் குஞ்சன் கேதன், "சுபா சுப்ஸைப் பொறுத்தவரை, 'ஃபாரெவர் ஃபன்' எங்கள் முக்கிய தத்துவமாக இருந்து வருகிறது. இந்த பிரச்சாரத்தின் மூலம், ஒரு எளிய ருசிக்கும் தருணத்தை தூய்மையான, கணிக்க முடியாத வேடிக்கையின் அனுபவமாக மாற்றுவதன் மூலம் அதை ஒரு படி மேலே கொண்டு செல்ல விரும்பினோம். எங்கள் பெல்ட்களில் உள்ள இனிப்பு-புளிப்பு கலவை சுவை மட்டுமல்ல, அது மகிழ்ச்சி, சிரிப்பு மற்றும் ஒவ்வொரு கடியிலும் குழப்பமான வேடிக்கையைப் பற்றியது.

# எக்ஸ்ஏடி 2026 தேர்வுக்கு விண்ணப்பம் தொடக்கம் 250+ பி-ஸ்கூல்கள் மூலம் எம்பிஏ/பிஜிடிஎம் சேர்க்கை

**சென்னை, ஜூலை 23-**
75+ ஆண்டுகள் நீடித்த மரபுடன், எக்ஸ்ஏடி (சேவியர் திறனறித் தேர்வு) என்பது இந்தியாவின் நம்பகமான எம்பிஏ/பிஜிடிஎம் நுழைவுத் தேர்வாக திகழ்கிறது. எக்ஸ்எல்ஆர்ஐ இன் தலைமையில், எக்ஸ்ஏஎம்ஐ சார்பாக நடத்தப்படும் எக்ஸ்ஏடி *2026* தேர்வு ஜனவரி *4, 2026* அன்று நடைபெறுகிறது. விண்ணப்பங்கள் தற்போது *xatonline.in* இல் தொடங்கியுள்ளன. இந்த தேர்வு, *250+* முன்னணி *B*-ஸ்கூல்கள் (எக்ஸ்எல்ஆர்ஐ, எக்ஸ்ஐஎம்பி, டிஏபிஎம்ஐ, ஐஎம்டி, எம்ஐசிஏ, ஐஆர்எம்ஏ போன்றவை) மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. *100+* நகரங்களில் தேர்வு மையங்கள் மூலம் நகரம் மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. எக்ஸ்ஏடி தேர்வில் உட்பிரிவுகளுக்கான நேர வரம்புகள் இல்லை, மாணவர்கள் தேர்வின் போதே பிரிவுகளுக்கு இடையே மாறலாம்.

இது முழுமையான மதிப்பீடு செய்யும் தேர்வாக, தீர்மான திறன் மற்றும் பகுப்பாய்வு திறனை சோதிக்கிறது. மற்ற தேர்வுகளை விட மேலும் ஒரு மாதம் அதிக நேரம் தயாரிக்கக்கூடிய வசதியையும் வழங்குகிறது. ஒரே நேரத்தில் நடத்தப்படுவதால் மதிப்பெண் நார்மலைசேஷன் தேவையில்லை. எக்ஸ்ஏடி என்பது ஒரு தேர்வை மட்டும் அல்ல; அது தலைமைத்துவத்தின் மரபாகும். எக்ஸ்ஏடி*2026* தேர்வின் மூலம், நாங்கள் மாற்றங்களை ஏற்று, மாணவர் மையத்திலான அணுகுமுறையை வலுப்படுத்துகிறோம் என்று எக்ஸ்ஏடி *2026* ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ராகுல் சுக்லா கூறினார். எக்ஸ்ஏடி தேர்வு, மற்ற நுழைவுத் தேர்வுகளுடன் சேர்த்து எழுதுவதற்கான விரிவான வாய்ப்பையும், அதிக முயற்சியின்றி உயர்தர இரண்டாம் வாய்ப்பையும் அளிக்கிறது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# தேனி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: மாவட்ட கலெக்டர் பார்வையிட்டார்



**தேனி, ஜூலை 23-**
தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி வார்டு *1, 2, 3, 4, 5, 6, 7* ஆகிய பகுதிகளுக்கு சுருளி சாலையில் உள்ள சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் கலந்து கொண்டு பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதல்வர் அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களை, சென்று சேரும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை *15.07.2025* அன்று தொடங்கி வைத்தார்கள். இம்முகாம்கள் மூலம் நகர்பகுதிகளுக்கு *13* துறைகளில் *43* சேவைகளும், கிராமப்பகுதிகளுக்கு *15* துறைகளில் *46* சேவைகளும் வழங்கப்படவுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகைப் பெற தகுதியுள்ள பெண்களும் இம்முகாம்களில் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

ஐந்தாம் நாளாக இன்றையதினம் பெரியகுளம் நகராட்சி வார்டு *5, 6, 7* ஆகிய பகுதிகளுக்கு, வடகரை கோவிந்தம் மயில்தாயம்மாள் மண்டபத்திலும், ஹைவேவிஸ் பேரூராட்சி வார்டு *1, 2, 3, 4. 5, 6, 7* ஆகிய பகுதிகளுக்கு *IB* மண்டபத்திலும், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியம் தும்மகுண்டு, முருக்கோடை ஆகிய பகுதிகளுக்கு வருசநாடு வேணியம்மன் கோவில் மண்டபத்திலும், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் இராஜகோபாலன்பட்டி ஊராட்சிக்கு கொண்டமநாயக்கன்பட்டி கிருஷ்ணா மஹாலில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு, மனு அளித்தவர்களுக்கு உடனடி தீர்வாக குடும்ப அட்டை, மின் இணைப்பு பெயர் மாற்றம், தொழிலாளர் நல வாரிய அட்டை உள்ளிட்ட அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து, கோம்பை பேரூராட்சி சிக்கச்சியம்மன் கோயில்மேடு பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிப்பு பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, அடிப்படை வசதிகள் குறித்து அப்பகுதி மக்களிடம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வுகளில், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது, பேரூராட்சித் தலைவர் வேல்முருகன், வட்டாட்சியர்கள் கண்ணன் (உத்தமபாளையம்), அர்ஜுனன் (ச.பா.தி.), செயல் அலுவலர் பஷீர் அஹமது, வட்டார வளர்ச்சி அலுவலர் (சின்னமனூர்) ஆண்டாள், மருத்துவ அலுவலர் மரு.ஜெகதீஸ்வரி, சுகாதார அலுவலர் ரசீத்ராஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வாடிப்பட்டி வடக்கு ஒன்றியம் சார்பில்

# கட்டகுளத்தில் விளையாட்டு உபகரணங்களை முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் வழங்கினார்



**வாடிப்பட்டி,ஜூலை 23-**
மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய அதிமுக சார்பில் கட்டக் குளத்தில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சிக்கு வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் மு காளிதாஸ் தலைமை தாங்கினார் முன்னாள் அமைச்சரும் புறநகர் மேற்கு மாவட்ட செயலாளருமான ஆர் பி உதயகுமார் விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் வழங்கி அன்னதானமும் வழங்கினார்.

முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எம் வி கருப்பையா மாணிக்கம் தமிழரசன் முன்னாள் யூனியன் சேர்மன் ராஜேஷ் கண்ணா விவசாய அணி மாவட்ட இணைச் செயலாளர் வாவிட மருதூர் ஆர்.பி. குமார் எம்.ஜி.ஆர். மன்ற மாவட்ட இணை செயலாளர் முடுவார் பட்டி ஜெயச்சந்திர மணியன்ஆகியோர் முன்னிலை வகித்தனர் இளைஞர் பாசறை மாவட்ட இணை செயலாளர் மு கா. மணிமாறன் வரவேற்புரை ஆற்றினார் நிர்வாகிகள்

மகளிர் அணி லட்சுமி மகமாயி , கச்சை கட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆலயமணி கோட்டைமேடு பாலன்.அலங்காநல்லூர் ஒன்றிய எம்.ஜி.ஆர். இளைஞர் அணி முன்னாள் செயலாளர் புதுப்பட்டி கிளைச் செயலாளர் பாண்டுரங்கன் விவசாய அணி துணைச் செயலாளர் முடுவார் பட்டி முத்துகிருஷ்ணன் , கோவில்பட்டி வழக்கறிஞர் அழகர்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கட்டக்குளம் கிளைச் செயலாளர் நன்றி கூறினார்

# செக்கானூரணியில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 3 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்

## மாவட்ட செயலாளர் மணிமாறன் வழங்கினார்




**திருமங்கலம், ஜூலை 23-**
முன்னாள் முதல்வர் கலைஞரின் *102*-வது பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் மேற்கு ஒன்றியம் செக்கானூரணி பகுதி மக்கள் *3* ஆயிரம் பேருக்கு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் நலத்திட்ட உதவிகளுடன் அசைவ விருந்தினை மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார்.

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞரின் *102*-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் தொகுதியில் வசித்திடும் சுமார் ஒன்றரை லட்சம் பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக *15*ம் நாள் நிகழ்வாக திருமங்கலம் மேற்கு ஒன்றியம் அ.கொக்குளம் ஊராட்சி செக்கானூரணியில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு திருமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் தனபாண்டியன் முன்னிலை வகித்து வரவேற்றார். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு தலைமையேற்று செக்கானூரணி பகுதி மக்கள் *3* ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கி சிறப்புரையாற்றினார். இதனை தொடர்ந்து விழாவிற்கு வந்திருந்த ஆயிரக் கணக்கான மக்களுக்கு சிக்கன் பிரியாணியுடன் கூடிய அறுசுவை அசைவ விருந்து வழங்கிடும் நிகழ்வினை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் துவக்கி வைத்து உணவு பரிமாறியதுடன் கிரிக்கெட் குழுக்களுக்கு கிரிக்கெட் பேட் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இவ்விழாவில் தலைமை செயற்குழு ஏர்போர்ட் பாண்டியன்,மாவட்ட துணை செயலாளர் லதா அதியமான், மாவட்ட கவுன்சிலர் ஜெயராஜ், திருமங்கலம் நகர் செயலாளர் ஸ்ரீதர்,நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், நாகராஜன், ஆலம்பட்டி சண்முகம், முத்துராமன், ஜெயச்சந்திரன், கட்சி நிர்வாகிகள் சிவனாண்டி, ஜெகதீஷ், செல்வேந்திரன், வழக்கறிஞர்கள் சிவனேசன், கவிஸ்ரீ தினேஷ், சுரேஷ், ஆலங்குளம் செல்வம், முருகன்,காளிதாஸ், ராஜசேகர், கருவேலம்பட்டி வெற்றி, முத்து, காண்டை முருகன், தவமணி முருகன், வடக்கம்பட்டி ராதாகிருஷ்ணன், மொக்கராஜ், முத்துப்பாண்டி, இன்பம் மற்றும் திருமங்கலம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

**காணவில்லை**

கடந்த 18.07.2025ந் தேதி காளையார் கோவில் பேருந்து நிலையம் அருகே வரும்போது கையில் இருந்து அசல் ஆவண எண்.1737/புத்தகம் 1/2002 சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணம் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செந்தில், த/பெ.காந்தி
226, ஆலம்பக்கோட்டை
சருகணி போஸ்ட்
தேவகோட்டை வட்டம்
சிவகங்கை மாவட்டம்.
செல் எண்:8489798122

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months there after.I L.SONIYA D/O LAKSHMANAN aged 26 YERAS residing at No.5/131,South Street, Rajagambiram, Manamadurai taluk, Sivagangai district-630609. intend having my enrolment as an advocate moved before the Bar council of Tamilnadu, Bar council buildings High court campus Chennai-104.Those who have any valid objections may notify the same to the bar council within 10 days.

L.SONIYA

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.
I.A.No : 2 / 2024
I.A.No : 3 / 2024
I.A.No : 4 / 2024
I.A.No : 5 / 2024
O.S.No : 198 / 2010

1) ரகுராமன்
2)ஸ்ரீராம்
- மனுதாரர்கள் / 2&3 பிரதிவாதிகள்

ஆர்.எம்.கே.ஆர்.நாககேஸ்வரன்
- எதிர்மனுதாரர் / வாதி

திருவள்ளூர் மாவட்டம், பாடி, பாக்கியத்தம்மாள் நகர், 5-வது குறுக்குத்தெருவில் வசித்து வரும் ராமன் மனைவி ஸ்ரீவாணி (1) திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர், R.F.ரோடு, கதவு எண். 166-ல் வசித்து வரும் லேட். ஆர்.எம்.கே.ஆர். நாககேஸ்வரன் மகள்கள் ஸ்ரீஞானாம்பிகை(2), ஸ்ரீஐஸ்வர்யா(3) மேற்படி அசல் வழக்கில் கடந்த 28-04-2018-ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச தீர்பாணையை ரத்துசெய்யகோரும் மனுவில் ஏற்பட்ட காலதாமதத்தை ஏற்றுக்கொள்ளக்கோரி I.A.No : 2 / 2024-ல் 1-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் மேற்படியாரின் வாரிசுகளை சேர்க்க கோரியும் Abatement உத்தரவை ரத்துக் கோரியும், காலதாமதத்தை ஏற்றுக்கொள்ள கோரியும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுக்கல் முறையே I.A.No : 3 / 2024, I.A.No : 4 / 2024 மற்றும் I.A.No : 5 / 2024 என்று நம்பராகி தாங்கள் மாண்பமை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் ஆஜராக வருகிற 24-07-2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி மனுக்களில் ஆட்சேபனையிருந்தால் கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி கோர்ட்டில் 24-07-2025-ம் தேதி அன்று காலை 10 மணிக்கு ஆஜராகி ஆட்சேபனைகளை தெரிவித்து கொள்ளவும் தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இடம் : பழனி
தேதி : 22-07-2025

வழக்கறிஞர்கள்,
R.திவ்யா B.A.,B.L.,
R.மோகன்குமார் M.A.,B.L.,

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம்
பரமக்குடி
ந.க.பி 6 /4929/2025
முனியாண்டி த/பெ ராமசாமி
தேவர் குறிச்சி கடலாடி வட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்
----மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை ராமசாமி என்பவர் கடந்த 04.07.2000 அன்று கடலாடி வட்டம், தேவர் குறிச்சி கிராமத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 06.08.2025 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

முனியாண்டி
மனுதாரர்

தமிழ்நாடு அரசு
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வேலூர் மாவட்டம்**
**ந.க.அ3 / 2656 / 2023**
**திட்டம்: 15th CFC (PHC) - 2025 - 26**

1. மின் ஒப்பந்தப்புள்ளி நமூனா முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in/nicgep/app இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களால் கீழ்காணும் பணிகளுக்கு மின் ஒப்பந்தபுள்ளிகள் (ஒரு உறை முறை) வரவேற்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | கூடநகரம் ஊராட்சியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் (Additional PHC) கட்டுதல் பணி | Rs.78.20 in lakh |

3. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதள முகவரியில் இலவசமாக 22.07.2025 முதல் 31.07.2025 மாலை 3.00 மணி வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த நமூனா 31.07.2025 மாலை 3.00 வரை ஆகும்
5. மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 31.07.2025 பிற்பகல் 4.00 மணி வரை.
6. இதர விவரங்கள் ஒப்பந்த நமூனாவில் தெரிந்துக்கொள்ளலாம்.

**செ.ம.தொ.இ /3739 / ஒப்பந்தப்புள்ளி / 2025**

**வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)**
**குடியாத்தம்**

**பொது அறிவிப்பு**

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் டவுன், வெள்ளையாண்டி தெரு. கதவு எண்:22/16-ல் வசித்து வரும் மாடசாமி குமாரரும், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் டவுன், 14வது வார்டு, காந்தி நகரில் செயல்பட்டு வரும் சேனைத் தலைவர் வாலிபர் சங்கத்தின் தற்போதைய செயலாளருமான நவநீதகிருஸ்ணன் ஆகிய எமது கட்சிக்காரரின் சார்பில் கொடுக்கலான பொது அறிவிப்பு யாதெனில்

மேற்கண்ட சேனைத் தலைவர் வாலிபர் சங்கத்திற்கு சொந்தமான போடிநாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்:6025/2012 கிரைய பத்திரத்தின் அசலானது கடந்த 19.07.2025ம் தேதி போடிநாயக்கனூர் ஜ.கா.நி. மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு நகல் எடுக்க சென்ற போது எமது கட்சிக்காரர் வைத்திருந்த மஞ்சள் நிற பையுடன் எதிர்பாராவிதமாக தவறி விட்டது. மேற்கண்ட கிரையப் பத்திரத்தின் அசலை கண்டுபிடிக்க எமது கட்சிக்காரர் எவ்வளவோ முயன்றும் கிடைக்கவில்லை. மேற்கண்ட பத்திரத்தின் அசலை யாரேனும் எடுத்திருந்தால் அதை எமது கட்சிக்காரரிடம் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றது. மேற்படி அசல் கிரைய பத்திரத்தை வைத்து யாரும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைளில் ஈடுபட்டால் அது எமது கட்சிக்காரரையோ, அவர் சார்ந்த சங்கத்தையோ எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், மேலும் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

இப்படிக்கு
P.ஜெயப்பிரகாஸ். B.Sc., B.L.,
வழக்கறிஞர், போடிநாயக்கனூர்.

## இன்று 4-வது டெஸ்ட் தொடக்கம்:
# இங்கிலாந்துக்கு பதிலடி கொடுக்குமா இந்தியா..?



**மான்செஸ்டர், ஜூலை 23-**
மான்செஸ்டரில் இன்று தொடங்கும் 4-வது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று இந்தியா பதிலடி கொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

**பின்தங்கியது...**
சுப்மன்கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் தொடரில் 3 போட்டி முடிவில் இந்தியா 1-2 என்றகணக்கில் பின்தங்கி இருக்கிறது. லீட்சில் நடைபெற்ற முதல் டெஸ்டில் 5 விக்கெட் வித்தியாசத்திலும், லார்ட் சில் நடந்த 3-வது போட்டியில் 22 ரன்னிலும் இங்கிலாந்து வெற்றி பெற்றது. பர்மிங்காமல் நடந்த 2-வது டெஸ்டில் இந்தியா 336 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**சமன் செய்யுமா?...**
இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்ட் டிராபோர்டு மைதானத்தில் இன்று (23-ந்தேதி) தொடங்குகிறது. லார்ட்ஸ் டெஸ்டில் வெற்றிக்கு அருகே வந்து தோற்றது ஏமாற்றத்தை அளித்தது. இதற்கு இந்திய அணி பதிலடி கொடுத்து தொடரை சமன் செய்யுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

**கடுமையான சவால்...**
இந்த டெஸ்டிலும் தோற்றால் தொடரை இழந்து விடும். இதனால் வெற்றி பெற வேண்டிய கட்டாயம் சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணிக்கு இருக்கிறது. ஓல்ட் டிராபோர்டில் இதுவரை வெற்றி பெற்றது கிடையாது. இதனால் கடுமையான சவால் காத்திருக்கிறது. வீரர்களின் காயத்தால் இந்திய அணி தத்தளிக்கிறது. முழங்கால் காயம் காரணமாக நிதிஷ்குமார் ரெட்டி எஞ்சிய 2 போட்டியில் இருந்து விலகி உள்ளார். இதுவரை வாய்ப்பு கிடைக்காத அர்ஷ்தீப் சிங்கும் நாளைய டெஸ்டில் ஆடவில்லை. இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயத்தால் ஆகாஷ் தீப்பும் ஆடுவது சந்தேகமே. இதனால் 24 வயதான அன்ஜுல் கம்போஜ் அணியோடு இணைந்துள்ளார். அவர் டெஸ்டில் அறிமுகமாகும் நிலை உள்ளது.

**ரிஷப் பண்ட் தகுதி...**
முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா இந்த டெஸ்டில் ஆடுவது உறுதியாகியுள்ளது. ஷர்துல் தாக்கூர், பிரசித் கிருஷ்ணா ஆகியோரும் வாய்ப்பில் இருக்கிறார்கள். தமிழக வீரர் சாய் சுதர்ஷனுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. அவர் முதல் டெஸ்டில் மொத்தம் 34 ரன்களே எடுத்தார். முன்னணி பேட்ஸ்மேனான ரிஷப் பண்ட் உடல் தகுதியுடன் இருப்பதால் விளையாடுவார். ஆனால் அவர் விக்கெட் கீப்பிங் செய்வாரா? என்பது தெரியவில்லை. அதே நேரத்தில் விக்கெட் கீப்பரான துருவ் ஜூரல் 11 பேர் கொண்ட அணியில் இடம் பெறலாம் என்று கருதப்படுகிறது.

**தொடரை கைப்பற்ற...**
மிகவும் முக்கியமான இந்த டெஸ்டில் இந்திய வீரர்கள் அனைவரும் முழு திறமையை வெளிப்படுத்துவது அவசியமாகும். மிகப் பெரிய ஸ்கோரை குவித்தால் மட்டுமே இங்கிலாந்துக்கு சவால் கொடுக்க முடியும். பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி இந்த டெஸ்டில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றும் ஆர்வத்துடன் உள்ளது. 11 பேர் கொண்ட அணியில் ஒரே ஒரு மாற்றம் மட்டுமே செய்யப்பட்டு உள்ளது. காயமடைந்த சுழற்பந்து வீச்சாளர் சோயிப் பஷீருக்கு பதிலாக லியம் டாசன் இடம் பெற்று உள்ளார். அவர் 8 ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்டில் விளையாடுகிறார். இந்திய நேரப்படி மாலை 3.30 மணிக்கு இந்த டெஸ்ட் போட்டி தொடங்கும்.

**140-வது டெஸ்ட்...**
இரு அணிகளும் இன்று மோதுவது 140-வது டெஸ்ட் போட்டியாகும். இதுவரை நடந்த 139 டெஸ்டில் இந்தியா 36-ல், இங்கிலாந்து 53-ல் வெற்றி பெற்றுள்ளன. 50 போட்டி டிரா ஆனது. மான்செஸ்டரில் 9 டெஸ்டில் ஆடி இந்திய அணி வெற்றி பெறறதில்லை. 4-ல் தோற்றது. 5 டெஸ்ட் டிரா ஆனது.

### மான்செஸ்டரில் மிரட்டும் மழை..!
4-வது டெஸ்ட போட்டி இன்று மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராப்போர்டில் இன்று தொடங்குகிறது. மான்செஸ்டரில் தற்போது மழை பெய்து வருகிறது. இதனால் வீரர்கள் வலைப்பயிற்சி மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது. மேலும் மான்செஸ்டரில் இன்றும் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கணித்திருப்பதால் போட்டி திட்டமிட்டபடி தொடங்குவதில் தாமதம் ஏற்படலாம்.

## ஐ.சி.சி. ஒருநாள் பேட்டிங் தரவரிசை:
# ஸ்மிருதி மந்தனா முதலிடம்

**துபாய், ஜூலை 23-**
ஐ.சி.சி. ஒருநாள் போட்டிகளுக்கான பேட்டிங் தரவரிசையில் ஸ்மிருதி மந்தனா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.



**மந்தனா முதலிடம்...**
ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசையை ஐ.சி.சி. நேற்று (ஜூலை 22) வெளியிட்டுள்ளது. அதில் இந்திய அணியின் துணைக் கேப்டனான ஸ்மிருதி மந்தனா பேட்டிங் தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

**தீப்தி முன்னேற்றம்...**
ஆல்ரவுண்டரான தீப்தி சர்மா பேட்டிங் தரவரிசையில் 10 இடங்கள் முன்னேறி, 23-வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயல்பட்டு வருவதையடுத்து, பேட்டிங் தரவரிசையில் தீப்தி சர்மா முன்னேற்றம் கண்டுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 62 ரன்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவிய தீப்தி சர்மா, இரண்டாவது ஒருநாள் போட்டியில் 30 ரன்கள் எடுத்தார்.

**ஹர்மன்பிரீத் சறுக்கல்...**
முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் 28 ரன்கள் மற்றும் 42 ரன்கள் முறையே எடுத்த ஸ்மிருதி மந்தனா, 727 ரேட்டிங் புள்ளிகளுடன் பேட்டிங் தரவரிசையில் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர் 5 இடங்கள் சறுக்கி 21-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் அவர் 17 ரன்கள் மற்றும் 7 ரன்கள் முறையே எடுத்ததே குறிப்பிடத்தக்கது.

# 4-வது டெஸ்ட்: இங்கிலாந்தின் ஆடும் லெவனில் ஒரு மாற்றம்

**மான்செஸ்டர், ஜூலை 23-**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1-2 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் மோதும் 4-வது போட்டி வரும் 23-ம் தேதி மான்செஸ்டரில் தொடங்க உள்ளது.

**வீரர்கள் காயம்...**
தொடரை வெல்லும் வாய்ப்பில் நீடிக்க இந்த 4-வது டெஸ்டில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடிக்குள் இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது. இதனிடையே இந்திய அணியில் நிறைய வீரர்கள் காயத்தை சந்தித்துள்ளனர். இதனால் இந்திய அணியில் நிறைய மாற்றங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒரு மாற்றம்...**
இந்நிலையில் 4-வது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியின் ஆடும் லெவன் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே ஒரு மாற்றம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. சுழற்பந்து வீச்சாளர் பஷிருக்கு பதிலாக லியாம் டாசன் இடம் பெற்றுள்ளார்.

**ஆடும் லெவன்...**
4-வது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியின் ஆடும் லெவன்:- க்ராலி, டக்கெட், போப், ரூட், ப்ரூக், ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஸ்மித், லியாம் டாசன், வோக்ஸ், கார்ஸ், ஆர்ச்சர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

## பாராளுமன்ற அலுவல் பட்டியல்
# தமிழ் உள்பட 10 பிராந்திய மொழிகளில் வெளியீடு

**புதுடெல்லி, ஜூலை 23-**
பாராளுமன்ற அலுவல் பட்டியல் தமிழ் உள்ளிடட் 10 பிராந்திய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.
பாராளுமன்றத்தில் முன்பு ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே பேச முடிந்தது. பின்னர் பல மாநில எம்.பி.க்களின் முயற்சிகளுக்கு பிறகு பிராந்திய மொழிகளில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதைப்போல மொழிபெயர்ப்பு வசதியும் முன்பு இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தது. கடந்த ஆண்டு முதல் இது அனைத்து மொழிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது.
இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் மக்களவை அலுவல் பட்டியலும் தமிழ் உள்ளிட்ட பிராந்திய மொழிகளில் வெளியானது. தற்போது ஆங்கிலம், இந்தி, தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி உள்பட 10 மொழிகளில் கிடைக்கிறது.

# சீமானுக்கு 4 வாரங்களில் புதிய பாஸ்போர்ட் வழங்க உத்தரவு

**சென்னை, ஜூலை 23-**
நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு, நான்கு வாரங்களில் புதிய பாஸ்போர்ட் வழங்கும்படி, மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இதுதொடர்பாக சீமான் தாக்கல் செய்த மனுவில், " தனது பாஸ்போர்ட் காணாமல் போனதாகவும், புதிய பாஸ்போர்ட் வழங்கக் கோரி மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு விண்ணப்பித்த போது, நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளைச் சுட்டிக் காட்டி, தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். புது பாஸ்போர்ட் வழங்கக் கோரிய விண்ணப்பத்தை நிராகரித்த உத்தரவை ரத்து செய்து, பாஸ்போர்ட் வழங்க உத்தரவிட வேண்டும்" எனக் கோரியுள்ளார்.
இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, சீமான் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சங்கர், "அரசியல் காரணங்களுக்காக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், புதிய பாஸ்போர்ட் வழங்க உத்தரவிட வேண்டும்" என வாதிட்டார். மனுவை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், புதிய பாஸ்போர்ட் வழங்கக் கோரிய விண்ணப்பத்தை பரிசீலித்து, நான்கு வாரங்களில் பாஸ்போர்ட் வழங்க வேண்டும் என, மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

## முறியடிக்கப்படாத சாதனை
இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராக பி.டி உஷா, 61, இருக்கிறார். இவர் தடகள வீராங்கனை ஆவர். பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி அசத்தி உள்ளார். இந்தியா சார்பில் ஆசியப்போட்டிகளில் தங்கம் வென்றவர். ஒலிம்பிக் போட்டியிலும் பங்கேற்றவர்.கடந்த 41 ஆண்டுக்கு முன், அவரது 20 வயதில் கேரளாவில் மாநில அளவில் பெண்களுக்கான 100 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப் பந்தங்களில் பி.டி. உஷா சாதனை படைத்தார். அதாவது, 1984ம் ஆண்டில், 100 மீட்டரை 11.40 வினாடிகளிலும், 400 மீட்டரை 52.70 வினாடிகளும் கடந்து சாதனை படைத்து இருந்து இருந்தார். இந்த சாதனையை முந்தி செல்ல கொல்லத்தைச் சேர்ந்த 20 வயதான ஆர்த்ரா முயற்சி செய்தார். ஆனால் அவரால் பி.டி.உஷாவின் சாதனையை முறியடிக்க முடியவில்லை.
20 வயதான ஆர்த்ரா, 100 மீட்டரை 11.87 வினாடிகளில் கடந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன், 100 மீட்டரை 11.84 வினாடிகளில் கடந்த ஓட்டப்பந்தய வீரரான ஷில்பி, இந்த முறை, 12.10 வினாடிகளில் கடந்தார். ஆனாலும், 41 ஆண்டுக்கு முன், அதாவது 20 வயதில், பி.டி. உஷா நிர்ணயித்த இலக்கை, திருவனந்தபுரத்தில் நடந்த 69வது மாநில சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் யாரும் முறியடிக்கவில்லை என்று கேரள விளையாட்டுத் துறையினர் கூறி வருகின்றனர்.

## விளையாடுவாரா ரிஷப்?
இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் லண்டன் லார்ட்சில் நடந்த 3-வது டெஸ்டில் இந்திய அணியின் விக்கெட் கீப்பரும், துணை கேப்டனுமான ரிஷப் பண்ட் பாய்ந்து விழுந்து பந்தை பிடிக்க முயற்சித்தபோது, இடதுகை ஆள்காட்டி விரலில் காயம் ஏற்பட்டது. அதன் பிறகு அந்த ஆட்டம் முழுவதும் அவர் விக்கெட் கீப்பிங் செய்ய வரவில்லை. இதனால் துருவ் ஜூரெல் விக்கெட் கீப்பர் பணியை கவனித்தார். ஆனால் பண்ட் பேட்டிங் மட்டும் செய்தார்.
மான்செஸ்டரில் இன்று தொடங்கும் 4-வது டெஸ்டிலும் அவர் விக்கெட் கீப்பிங் செய்வது சந்தேகம்தான். இதனால் அவர் ஒரு பேட்ஸ்மேனாக மட்டும் ஆடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. இருப்பினும் பல முன்னாள் வீரர்கள் ரிஷப் பண்டை முழுநேர பேட்ஸ்மேனாக ஆட வைக்க கூடாது என்று கூறிவருகின்றனர். இந்நிலையில் . மான்செஸ்டரில் ரிஷப் பண்ட் தற்போது பயிற்சியை தொடங்கி உள்ளார் . விக்கெட் கீப்பிங் , பேட்டிங் பயிற்சில் ரிஷப் பண்ட் ஈடுபட்டு வருகிறார் . இதனால் அவர் 4-வது டெஸ்ட் போட்டியில் விளையாடுவார் என தகவல் வெளியாகியுள்ளது.

## ரொனால்டோ சறுக்கல்
கால்பந்து வரலாற்றில் பெனால்டி அல்லாமல், அதிக கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் ரொனால்டோவை (போர்ச்சுகல்) பின்னுக்குத் தள்ளி மெஸ்ஸி (அர்ஜென்டினா) முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார் . பெனால்டி அல்லாமல் மெஸ்ஸி 764 கோல்களும், ரொனால்டோ 763 கோல்களும் அடித்துள்ளனர். குறிப்பாக, ரொனால்டோவை விட 167 போட்டிகளுக்கு முன்பாகவே இந்த மைல்கல்லை மெஸ்ஸி எட்டியுள்ளார்.
நேற்று முன்தினம் நடைபெற்ற இன்டர் மியாமி மற்றும் என்.ஒய் ரெட் புல்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியில், மெஸ்ஸி 2 கோல்கள் அடித்ததன் மூலம் இந்த சாதனையை முறியடித்துள்ளார். மெஸ்ஸி கிளப் போட்டிகளில் இன்டர் மியாமி அணிக்காகவும், ரொனால்டோ அல் நசர் அணிக்காகவும் விளையாடி வருகின்றனர்.

## அல்காரஸ் திடீர் விலகல்
முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் கனடா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அங்குள்ள டொரண்டோ நகரில் அடுத்த வாரம் தொடங்குகிறது. இந்நிலையில், நம்பர் 2 வீரரான ஸ்பெயினைச் சேர்ந்த கார்லோஸ் அல்காரஸ் இந்தத் தொடரில் இருந்து விலகி உள்ளார். ஏற்கனவே காயம் காரணமாக நம்பர் 1 வீரரான ஜானிக் சின்னர், நம்பர் 5 வீரரான ஜோகோவிச் மற்றும் பிரிட்டனின் ஜாக் டிராபர் ஆகியோர் இந்தத் தொடரில் இருந்து விலகி உள்ளனர்.

## லக்சயா சென் தோல்வி
சீன ஓபன் பேட்மிண்டன் போட்டி சீனாவின் சாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது .இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்றில் இந்தியாவின் லக்சயா சென், சீனாவின்லீ ஷீபெங் உடன் மோதினார்.
பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டை 21-14 என லக்சயா சென் கைப்பற்றினார். சுதாரித்துக் கொண்டு அதிரடியாக ஆடிய சீன வீரர் அடுத்த இரு செட்களை 24-22, 21-11 என்ற செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.இதனால் இந்தியாவின் லக்சயா சென் தொடரில் இருந்து வெளியேறினார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே பழனிசாமி, தொடர் சுற்றுப்பயணத்தின் ஒருபகுதியாக திருவிடைமருதூர் வரும் வழியில், பட்டுக்குப் புகழ்பெற்ற திருபுவனத்தில், நெசவுத் தொழிலாளர்கள் பிரச்சனைகள் குறித்து கைத்தறி நெசவாளரிடம் நேரில் கேட்டறிந்தார்.

# குரூப் 4 மறுதேர்வு நடத்த வேண்டும்: இ.பி.எஸ்.

**சென்னை, ஜூலை 23-**
குளறுபடிகளின் உச்சமாக இருக்கும் குரூப்-4 தேர்வை ரத்து செய்து மறுதேர்வு நடத்த வேண்டும் என அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பாக எதிர்கட்சி தலைவரும் அ.தி.மு.க பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டு இருப்பதாவது:- குளறுபடிகளின் உச்சமாக இருக்கும் குரூப்-4 தேர்வு ரத்து செய்ய பட வேண்டும்; மறுதேர்வு நடத்தப்பட வேண்டும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் கடந்த 12.07.2025 அன்று நடைபெற்ற குரூப்-4 தேர்வு ஆரம்பிக்கும் முன்னரே, மதுரையில் வினாத்தாள் ஒரு தனியார் ஆம்னி பேருந்தில், முறையாக சீலிடப்படாமல், கதவின் மேல் ஒரு ஏ-4 ஷீட் ஒட்டப்பட்ட நிலையில் அனுப்பப்பட்டது சர்ச்சையானது. பிறகு, தேர்வு வினாத்தாளில் பல கேள்விகள், குறிப்பாக தமிழ்ப் பாடக் கேள்விகள், பாடத்திட்டம் அப்பாற்பட்டு இருந்ததாக பல்வேறு தேர்வர்கள் புகார் தெரிவித்தனர்.
க வி.ஏ.ஓ பதவி என்பது தமிழ்நாடு அரசின் வேர் போன்றது. ஜாதி மத பேதமின்றி, ஏழை எளிய பின்னணி கொண்ட மக்கள் அரசு அதிகாரிகள் ஆகவேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட பதவி. பல லட்சம் மாணவர்களின் கனவாக இருக்கக் கூடிய குரூப்-4 தேர்வு என்பது, எவ்வளவு முறையாக நடத்தப்பட வேண்டியது?
ஆனால், இந்த ஸ்டாலின் மாடல் அரசோ, மெத்தனப் போக்கின் உச்சத்தில் இந்த தேர்வை நடத்தி, தேர்வர்களின் வாழ்க்கையோடு விளையாடியுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஜூலை 12 அன்று நடைபெற்ற குரூப்-4 தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும்; உடனடியாக மறு தேர்வு வைக்க வேண்டும் எனவும், குரூப்-4 குளறுபடிகள் குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஸ்டாலின் மாடல் தி.மு.க அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 'ஓரணியில் தமிழ்நாடு' முகாம்:
# தி.மு.க. இடையீட்டு மனுவுக்கு ஐகோர்ட் மதுரை கிளை அனுமதி

**மதுரை, ஜூலை 23-**
தி.மு.க.வின் 'ஓரணியில் தமிழ்நாடு' முகாமில் ஓடிபி எண் பெற தடை விதிக்கப் பட்டுள்ள நிலையில், தடையை விலக்க கோரி இடையீட்டு மனு தாக்கல் செய்ய தி.மு.க.வுக்கு நீதிபதிகள் அனுமதி வழங்கினர்.
தமிழகம் முழுவதும் தி.மு.க.வினர் நடத்தி வரும் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற உறுப்பினர் சேர்க்கை முகாமில் பொது மக்களிடம் ஓடிபி எண் பெற உயர் நீதி மன்ற மதுரை அமர்வு நேற்று தடை விதித்தது.
இந்த நிலையில், தி.மு.க. தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் ஓரணியில் தமிழ்நாடு நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் சார்பில் மூத்த வழக்கறிஞர் வில்சன் நேற்று நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரிய கிளாட் அமர்வு முன்பு அஜரானார்.
அப்போது அவர் நீதிபதிகளிடம், "பொதுமக்களிடம் தி.மு.க.வின் 'ஓரணியில் தமிழ்நாடு' முகாமில் ஆதார் விவரங்கள் எதையும் வாங்கவில்லை. அ.தி.மு.க. தரப்பில் ஆதார் எண்ணை பயன்படுத்தி ஓடிபி பெறுவதாக தவறான தகவலை நீதிமன்றத்தில் தெரிவித்து இடைக்கால உத்தரவு பெற்றுள்ளனர். தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் அடிப்படையிலேயே உறுப்பினர்களை சேர்க்கிறோம். உறுப்பினர் சேர்க்கை சம்மதம் பெறுவதற்காகவே ஓடிபி பெறப்பட்டது. வேறு எந்த ஆவணத்தையும் யாரிடமும் வாங்கவில்லை. தவறான தகவலை அளித்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.
உயர் நீதிமன்ற தடையால் தற்போது உறுப்பினர் சேர்க்கை பணி மொத்தமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே தி.மு.க. கோரிக்கையை அவசர வழக்காக விசாரித்து இடைக்கால தடையை விலக்க வேண்டும்," என்றார். அதற்கு நீதிபதிகள், தி.மு.க. கோரிக்கை தொடர்பாக இடையீட்டு மனு தாக்கல் செய்யவும், நாளைக்கு விசாரணைக்கு எடுக்கிறோம் எனத் தெரிவித்தனர்

## சாத்தான்குளம் கொலை வழக்கில் திருப்பம்:
# அப்ரூவராகிறார் முன்னாள் இன்ஸ்பெக்டர்

**மதுரை, ஜூலை 23-**
சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் முன்னாள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் அப்ரூவர் ஆக உள்ளதாக தெரிவித்துள்ளார்.
கடந்த 2020-ம் ஆண்டு கொரோனா ஊரடங்கு காலகட்டத்தின்போது, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் போலீசார் விசாரணை என்ற பெயரில் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று கொடூரமாக தாக்கியதில் இருவரும் உயிரிழந்தனர்.
இந்த இரட்டைக் கொலை குறித்து சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கு தொடர்பாக அப்போதைய சாத்தான்குளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்-இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 10 போலீசார் கைது செய்யப்பட்டனர். இதில் சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த வழக்கில் தொடர்புடைய ஏனைய அனைவரும் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.இந்த இரட்டைக் கொலை வழக்கு மதுரை மாவட்ட முதன்மை செசன்சு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறது.
இந்தநிலையில், இந்த வழக்கில் திடீர் திருப்பமாக அப்ரூவராக மாறுவதாக முன்னாள் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் மனுதாக்கல் செய்துள்ளார். கொலை வழக்கில் முதல் நபராக குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் ஆய்வாளர் ஸ்ரீதர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில்,அரசுத்தரப்பு சாட்சியாகி, அனைத்து காவலர்கள் செய்த செயல்களை சொல்ல விரும்புகிறேன். மனசாட்சிக்கு கட்டுப்பட்டு தந்தை, மகன் குடும்பத்திற்கு நீதி கிடைக்க விரும்புகிறேன் என அதில் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பாக சிபிஐ பதிலளிக்க மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் உத்தரவிட்டுள்ளார். மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வழக்கின் விசாரணை நடந்து வருகிறது. 105 சாட்சிகளில் 52 சாட்சிகளிடம் விசாரிக்கலாம் என சி.பி.ஐ. எழுத்துப்பூர்வமாக தெரிவித்திருந்தது. முதல்கட்டமாக 2027 பக்கமும், 2-ம் கட்டமாக 400 பக்கமும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது சி.பி.ஐ.

# ராமேசுவரம் மீனவர்கள் 4 பேர் கைது

**ராமேசுவரம், ஜூலை 23-**
எல்லை தாண்டி மீன்பிடித்ததாக, ராமேசுவரம் மீனவர்கள் 4 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது.
தமிழகத்தை சேர்ந்த மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் சிறைப்பிடிக்கும் சம்பவம் தொடர்ந்து நடந்து வருகிறது. அதோடு மட்டுமின்றி மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது.
இந்த நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள், மீன்பிடி துறைமுகத்தில் இருந்து விசைப்படகுகளில் வழக்கம்போல் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அதன்படி மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி மீனவர்கள் 4 பேரை கைது செய்தனர். அதோடு மீனவர்களின் விசைப்படகினையும் பறிமுதல் செய்தனர்.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் 4 பேரையும் மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்து சென்று இலங்கை கடற்படையினர் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. தொடரும் இலங்கை கடற்படையின் அட்டூழியத்தை மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு தடுக்க வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சினிமா CINI செய்திகள்

## ‘கெவி’ திரைவிமர்சனம்



அடிப்படை வசதி இல்லாத ஒரு மலை கிராமத்தில் நாயகன் ஆதவன் தனது கர்ப்பினி மனைவியுடன் வாழ்ந்து வருகிறான். அவனுக்கும் அங்குள்ள வனத்துறை அதிகாரிகளுக்கும் பிரச்சனை உருவாகிறது. ஒரு நாள் அவனது மனைவிக்கு பிரசவ வலி ஏற்படுகிறது. அதே நேரம் வனத்துறை காவலர்களிடம் சிக்கி நாயகன் உயிருக்கு போராட, மறுபக்கம் அவரது மனைவியையும், குழந்தையையும் காப்பாற்ற கிராம மக்கள் போராடுகிறார்கள், இறுதியில் இவர்களது போராட்டம் என்ன ஆனது? என்பதை வலி மிகுந்த வாழ்க்கையை சொல்வதே ‘கெவி’. கதையின் நாயகன் ஆதவன், சிறப்பாகவும் நடித்திருக்கிறார்.

வனத்துறை காவலர்களிடம் சிக்கிக்கொண்டு உயிருக்கு போராடும் காட்சியில் கலங்கடித்து விடுகிறார். நடிப்பில் கண்கலங்க வைத்து விடுகிறார். ஜாக்குலின், சார்லஸ் வினோத், காயத்ரி என படத்தில் நடித்திருக்கும் அனைவரும் கதாபாத்திரத்திற்கு பொருத்தமான தேர்வாக இருக்கிறார்கள். தற்போதைய நவீன கால கட்டத்திலும், மருத்துவம் மற்றும் சாலை வசதி இல்லாத கிராமங்களில் வாழும் மக்களின் வலியை எதார்த்தமாக காட்சிப்படுத்தியிருக்கும் இயக்குநர் தமிழ் தயாளன், அந்த மக்களை தேர்தல் நேரத்தில் மட்டுமே சந்திக்கும் ஆட்சியாளர்கள் பற்றி விளாசி இருக்கிறார்.

## ‘ரெட் ஃப்ளவர்’ படத்தின் இசை வெளியீட்டு விழா




ஸ்ரீகாளிகாம்பாள் பிக்சர்ஸ் சார்பில் கே.மாணிக்கம் தயாரிக்க, விக்னேஷ் கதையின் நாயகனாக நடித்திருக்கும் திரைப்படம் “ரெட் ஃப்ளவர்” (Red flower). ஆக்‌ஷன் த்ரில்லர் படமாக உருவாகியுள்ள இந்த படத்தை ஆண்ட்ரூ பாண்டியன் எழுதி இயக்கியிருக்கிறார். ஆகஸ்ட் 8 ஆம் தேதி திரைக்கு வரவிருக்கும் இந்த படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் நாயகன் விக்னேஷ் பேசுகையில், 30 ஆண்டுகளுக்கும் மேல் சினிமாவில் கஷ்டப்பட்டிருக்கிறேன். எவ்வளவோ உழைத்திருக்கிறேன். சினிமா தான் எனக்கு எல்லாமே. சினிமாவை அவ்வளவு பிடிக்கும். அதனால் தான் இவ்வளவு நாள் கழித்தும் மீண்டும் நடிக்க வந்திருக்கிறேன் என்றார். ரெட் ஃப்ளவர் திரைப்படத்தில் நடிகர் விக்னேஷுக்கு ஜோடியாக மனிஷா ஜஷ்னானி நடிக்கிறார். படத்திற்கு கே.தேவசூர்யா ஒளிப்பதிவு செய்ய , சந்தோஷ் ராம் இசை அமைக்க , படத்தொகுப்பு அரவிந்தன் ஆறுமுகம் கவனிக்க, கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி இருக்கிறார் இயக்குனர் ஆண்ட்ரூ பாண்டியன்.

## ‘ஜென்ம நட்சத்திரம்’ விமர்சனம்




மணிவர்மன் இயக்கத்தில் தமன் குமார் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் ஜென்ம நட்சத்திரம். சஞ்சய் மாணிக்கம் இசையமைத்துள்ள இந்த படத்தில் மல்வி மல்ஹோத்ரா, காளி வெங்கட், தலைவாசல் விஜய் உட்பட பலர் நடித்திருக்கிறார்கள். நாயகன் தமன், சினிமாவில் நல்ல இயக்குனராக வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறார். தமனின் கர்ப்பினி மனைவி மல்வி மல்கோத்ராவுக்கு அடிக்கடி கெட்ட கனவுகள் வருகிறது.

இன்னொரு பக்கம் காளி வெங்கட் சில அரசியல்வாதிகளால் கொலை செய்யப்படுகிறார். தமன் மனைவியின் கனவுக்கு என்ன தீர்வு? காளி வெங்கட்டை எதற்காக கொன்றார்கள்? அதன் பின்னணி என்ன? என்பது தான் படத்தின் மீதி கதை. தமன் மற்றும் மல்வி மல்கோத்ராவும் இருவரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். இந்த படம் ஓமன் படத்தினுடைய ரீமேக் ஆகும். தமிழ் ரசிகர்களுக்கு ஏற்ப திரில்லர் எமோஷன்களுடன் படத்தை கொடுத்த இயக்குனருக்கு பாராட்டுக்கள் சில இடங்களில் சலிப்பு தட்டினாலும் அது கதை களத்தை பாதிக்கவில்லை. மொத்தத்தில் படத்தை ஒரு முறை பார்க்கலாம்.

## லோகேஷ் கனகராஜ் வழங்கும் ‘Mr. பாரத்’



பிரபல இயக்குநர் லோகேஷ் கனகராஜ் வழங்க, Passion ஸ்டூடியோஸ், ஜி ஸ்க்வாட், தி ரூட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் பாரத் & நிரஞ்சனின் “Mr. பாரத்” படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்துள்ளது.

படம் குறித்து Passion ஸ்டூடியோஸ் நிறுவனத்தின் தயாரிப்பாளர் சுதன் சுந்தரம் கூறும் போது, இளம் குழு என்பதாலேயே இவர்களது தெளிவு, திட்டமிடல் மற்றும் அர்ப்பணிப்பு நம்மை ஆச்சரியப்படுத்தியது.

கதை அம்சமே எங்களை ஈர்த்தது, ஆனால் திட்டமிட்டபடி நேரத்தில் படப்பிடிப்பை முடித்து, மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்தனர். ஒரு தயாரிப்பாளராக, இந்த குழுவுடன் இணைந்து பணியாற்றியதில் மிகுந்த மகிழ்ச்சி என்றார்.

முக்கிய கதாப்பாத்திரங்களில் பாரத், சம்யுக்தா விஸ்வநாதன், பாலா சரவணன், நிதி பிரதீப், ஆர். சுந்தர் ராஜ ன், லிங்கா, ஆதித்யா கதிர் ஆகியோர் நடிக்கிறார்கள்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## ஆகஸ்ட் 1-ல் வெளியாகும் ‘அக்யூஸ்ட்’



உதயா, அஜ்மல், யோகி பாபு, ஜான்விகா உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் அக்யூஸ்ட். பிரபு ஸ்ரீநிவாஸ் இயக்கியுள்ள இப்படத்தை ஜேசன் ஸ்டுடியோஸ் சச்சின் சினிமாஸ் ஸ்ரீ தயாகரன் சினி புரொடக்‌ஷன் மற்றும் மை ஸ்டுடியோஸ் ஆகிய நிறுவனங்கள் சார்பில் உதயா - ‘தயா’ என். பன்னீர்செல்வம் எம். தங்கவேல் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 1 அன்று இப்படம் வெளியாவதை ஒட்டி படக்குழுவினர் பத்திரிகையாளரை சமீபத்தில் சந்தித்தனர்.

அப்போது படம் குறித்து நாயகன் உதயா பேசுகையில், கடந்த மூன்று ஆண்டு காலத்தில் மன உளைச்சலுக்கும் ஆளாகி இருக்கிறேன். அதன் பிறகு மீண்டும் வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் பயணிக்க தொடங்கிய போது கேட்ட கதை தான் இந்த அக்யூஸ்ட் படத்தின் கதை என்றார். இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ் பேசுகையில், இந்தக் கதையில் நாயகனுக்கு இணையான கதாபாத்திரத்தில் அஜ்மல் நடித்தார். அவருக்கு கதை சொன்ன தருணத்திலிருந்து தற்போது வரை முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். கதையில் இடம்பெறும் மற்றொரு கதாபாத்திரத்திற்கு யோகி பாபுவிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் கதையைக் கேட்ட அவர் நடிக்க ஒப்புக்கொண்டதுடன் நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தொடர்ந்து 14 நாட்கள் கால்ஷீட் கொடுத்து ஒத்துழைப்பு அளித்தார் என்றார்.

## வெற்றி நடிக்கும் ‘சென்னை ஃபைல்ஸ் - முதல் பக்கம்’



சின்னத்தம்பி புரொடக்சன் மகேஸ்வரன் தேவதாஸ் தயாரிப்பில் வெற்றி நடிப்பில் அனீஸ் அஸ்ரப் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ‘சென்னை பைல்ஸ் - முதல் பக்கம். இந்த படத்தில் வெற்றி, ஷில்பா மஞ்சுநாத் , தம்பி ராமையா, மகேஷ் தாஸ், ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 1 அன்று இப்படம் வெளியாக உள்ள நிலையில் இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

இதில் படக்குழுவினர் அனைவரும் கலந்து கொண்டனர். விழாவில் நாயகன் வெற்றி பேசுகையில், நீண்ட நாட்களுக்குப் பிறகு உணர்வுப்பூர்வமான கிரைம் திரில்லர் படத்தை உருவாக்கி இருக்கிறோம். படப்பிடிப்பு தளத்தில் குடும்பமாக இணைந்து பணியாற்றினோம். ஆகஸ்ட் 1 அன்று படம் திரையரங்குகளில் வெளியாகிறது. அனைவரும் பார்த்து ரசித்து பேராதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்’ என்றார். இந்த திரைப்படத்தின் டீசரை விஜய் அண்டனி வெளியிட்டார். அந்த டீசரில் இடம் பிடித்திருக்கும் காட்சிகளும், உரையாடல்களும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்திருப்பதுடன் படத்தை பற்றிய எதிர்பார்ப்பையும் அதிகரித்திருக்கிறது.

### ஸ்ரீவில்லி., ஆண்டாள் கோவில் தேராட்டம்:

## வரும் 28-ம் தேதி விருதுநகர் மாவட்டத்திற்கு விடுமுறை

**விருதுநகர், ஜூலை 23-**

வரும் 28-ம் தேதி விருதுநகர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை விடப்படுவதாக மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா அறிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவில் தேரோட்டம் வரும் 28-ந் தேதி விமரிசையாக நடைபெற இருக்கிறது. அதையொட்டி, அன்றைய தினம் விருதுநகர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை விடப்படுவதாக மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா அறிவித்துள்ளார். அந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் ஆகஸ்டு 9-ந் தேதியை வேலை நாளாகவும் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

## நத்தம் அருகே தோட்டத்தில் ஆடு, மாடு மேய்ந்த விவகாரத்தில் மோதல்: 7 பேர் மீது போலீசார் வழக்கு

**நத்தம், ஜூலை 23-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சேத்தூர் ஊராட்சி முசுக்கம்பட்டியை சேர்ந்தவர் லக்கையன் (54) இவரது தோட்டத்தில் அதே ஊரை சேர்ந்த செல்வராஜ்(45) என்பவரது ஆடு,மாடுகள் மேய்ச்சலுக்காக சென்றது. இது குறித்து செல்வராஜுடம் லக்கையன் உனது ஆடு, மாடுகள் எனது தோட்டத்தில் புகுந்து விவசாய நிலங்களை அழித்து வருவதாக கூறியுள்ளார்.

இதற்கு ஆத்திரமடைந்த செல்வராஜ் அப்படி தான் ஆடு, மாடுகள் மேயும் என கூறி தகாத வார்த்தைகளால் திட்டி குடும்பத்தினர்களுடன் சேர்ந்து லக்கையனை தாக்கியுள்ளார். பதிலுக்கு லக்கையனும் அவர்களை தாக்கியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து இரு தரப்பினரும் நத்தம் போலீசில் புகார் செய்தனர்.

அதன்பேரில் போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் தர்மர் இருதரப்பை சேர்ந்த செல்வராஜ், முத்துப்பாண்டி(30), பொம்முதாய் (60), கௌதம் (29), சுகன்யா(30) லக்கையன் (54), அஜீத்(27) ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



**மதுரை மாநகர் மாவட்ட மத்திய 7-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் வட்ட செயலாளர்கள் ராமசந்திரன், எஸ்.பி.விக்னேஸ்வரன், ஆகியோர் தலைமையில் பகுதி கழக செயலாளர் ஆர்.சக்திவிநாயகர்பாண்டியன் முன்னிலையில் பேச்சியம்மன் படித்துறையில் நடந்த தெருமுனை பிரச்சார கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், சக்திமோகன், எம்.எஸ்.கே.மல்லன், ஏ.இந்திரா, பேராசிரியர் ஜெயபால், தளபதி மாரியப்பன், வக்கீல் தமிழ்செல்வன், ஓட்டுரணி திருமுருகன், எம்.ஜி.ராமச்சந்திரன், கறிக்கடை முத்துகிருஷ்ணன், எம்.ஏ.நாசர், ரவிராஜ், அண்ணாநகர் ரவிச்சந்திரன், திடீர்நகர் பாலா, பிஆர்சி மகாலிங்கம், மார்க்கெட் செந்தில்குமார், கோவில் நெடுஞ்செழியன், சுப்பையா, கார்னர் பாஸ்கர், பஜார் துரைப்பாண்டி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

### உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்:

## மேலூரில் பொதுமக்களிடம் 853 மனுக்கள் பெறப்பட்டன



**மேலூர், ஜூலை 23-**

பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளில் சேவை திட்டங்களை அவர்களது இல்லங்களுக்கு சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்னும் இந்த புதிய திட்டம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். அதில் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்கு உட்பட்ட 7,8,9 வது வார்டுகளை சேர்ந்த பொது மக்களுக்கு ரஹ்மா திருமண மண்டபத்தில் முகாம் நடைபெற்றது.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 853 மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டன.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் (தே.நெ.நி.எ) சக்திவேல், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை, நகராட்சி துணைத் தலைவர் இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் முத்துக்குமார், நகர்மன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், நகராட்சி பணியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



**வத்தலகுண்டு, ஜூலை 23-**

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி பேரூராட்சி காமராஜர் மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை உள்ளிட்ட 13 அரசு துறைகள் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டன.

முகாமில் 850 மனுக்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட மனுக்கள் உடனடியாக ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

இம்முகாமில் மகளிர் உரிமைத் தொகை பெற விடுபட்ட மகளிர் ஆர்வமுடன் மனுக்களை அளித்தனர்.முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் திண்டுக்கல் மாவட்டத்தின் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா, நிலக்கோட்டை தாசில்தார் ஜெயலட்சுமி, பேரூராட்சித்தலைவர் சியாமளா, துணைத் தலைவர் கல்பனாதேவி அருண்குமார். வத்தலக்குண்டு திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் முருகன், கிழக்கு ஒன்றிய செயலாளர் கனகதுரை, பட்டிவீரன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் கோபிநாத், நகர திமுக செயலாளர் அருண்குமார். சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர்ரமேஷ் பாபு, சித்தையன் கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு அய்யம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஈஸ்வரி, வத்தலகுண்டு வருவாய் ஆய்வாளர் பரிமளம் சேவகம் பட்டி கிராம நிர்வாக அலுவலர் சுமதிஊர்காலன் வத்தலகுண்டு கிராம நிர்வாக அலுவலர் சரண்யா நாகேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இம் முகாமிற்கான அனைத்து ஏற்படுகளையும் பட்டிவீரன்பட்டி பேரூராட்சி செயலாளர் கோபிநாத் மற்றும் பேரூராட்சி அனைத்து பணியாளர்களுடன் செய்திருந்தார்கள். முகாமின் முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பட்டிவீரன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் கோபிநாத் நன்றி கூறினார்.




● சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் மாணவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்ட உடற்கல்வி ஆசிரியர் வளநூல் எனும் புத்தகத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், முதன்மைச்செயலாளர் பி.சந்திரமோகன் கலந்து கொண்டனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி தொடர் சுற்றுப்பயணத்தின் ஒருபகுதியாக நேற்று தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் தொகுதியில் ஆயிரக்கணக்கில் கூடியிருந்த தொண்டர்கள் மத்தியில் அவர் உரையாற்றிய காட்சி.

# விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஜூலை 23-

விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளை சார்ந்த மாணவ. மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும் இவ்விழாவில் மாணவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்ட உடற்கல்வி ஆசிரியர் வளநூல் எனும் புத்தகத்தை உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார். 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று 76 தங்கம், 26 வெள்ளி, 24 வெண்கல பதக்கங்கள் என மொத்தம் 126 பதக்கங்களை வென்றுள்ளனர்.

தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று 348 தங்கம், 236 வெள்ளி, 333 வெண்கல பதக்கங்கள் என மொத்தம் 917 பதக்கங்களை வென்றுள்ளனர்.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று 1,484 தங்கம், 1,522 வெள்ளி, 1,739 வெண்கல பதக்கங்கள் என மொத்தம் 4,745 பதக்கங்களை வென்றுள்ளனர்.

# துணை ஜனாதிபதி தன்கரின் ராஜினாமா ஏற்பு

புதுடெல்லி, ஜூலை 23-

குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரின் ராஜினாமாவை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான ஜெகதீப் தன்கர் நேற்று முன்தினம் தனது பதவியை ராஜினாமா செய்தார். இது தொடர்பாக குடியரசு தலைவருக்கு கடிதம் அனுப்பிய அவர், அதன் நகலை குடியரசு துணைத் தலைவருக்கான எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டார். இதையடுத்து, நேற்று அவர் மாநிலங்களவைக்கு வருகை தரவில்லை. அவருக்குப் பதில், மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் அவையை நடத்தினார்.

மாநிலங்களவை ஒத்திவைப்புக்குப் பின் ஹரிவன்ஷுக்குப் பதிலாக அவையை நடத்திய பா.ஜ.க. எம்.பி. கன்ஷ்யாம் திவாரி, "குடியரசு துணைத் தலைவரின் ராஜினாமாவை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார். இது தொடர்பான அறிவிப்பை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அதன்படி, அரசியலமைப்பின் 67ஏ பிரிவின் கீழ் ஜெகதீப் தன்கரின் ராஜினாமா உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த ஜூலை 10-ம் தேதி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தன்கர், 2027 வரை பதவியில் நீடிக்கப் போவதாகவும், அதன் பிறகே ஓய்வுபெற போவதாகவும், அதுவே சரியான தருணமாக இருக்கும் என்றும் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.



● சென்னை எழிலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம், இணையவழி பட்டா மாறுதல் மற்றும் இதர திட்டங்கள் தொடர்பாக நில அளவை, நிலவரித்திட்ட துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டத்தில் நக்ஷா திட்டம் நடைபெறும் 10 மாவட்டங்களுக்கு 200 டி.ஜி.பி.எஸ். நில அளவை கருவிகளை வழங்கினார். இதில் கூடுதல் தலைமைச்செயலாளர் பெ.அமுதா, ஆணையர் கே.எஸ்.பழனிச்சாமி. இயக்குநர் ராஜகோபால் சுன்கரா ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை இராணிமேரி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் நிரப்பப்படவுள்ள 574 கௌரவ விரிவுரையாளர்கள் பணி தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான இணையதள பதிவினை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார். உடன் கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# ஜனாதிபதியின் 14 கேள்விகளுக்கு... (1-ம் பக்க தொடர்ச்சி)

கோர்ட்டின் ஆலோசனையை ஜனாதிபதி பெற முடியுமா?.

9. ஒரு சட்டம் அமலுக்கு வரும் முன்பு, கவர்னரும், ஜனாதிபதியும் அரசியல் சாசனத்தின் 200 மற்றும் 201-வது பிரிவுகளின்கீழ் எடுக்கும் முடிவுகள் கோர்ட் ஆய்வுக்கு உட்பட்டதா? மசோதா, சட்டம் ஆவதற்கு முன்பு, அதன் பொருள் குறித்து கோர்ட் விசாரிக்க அனுமதி உள்ளதா?.

10. ஜனாதிபதி, கவர்னர் ஆகியோரின் உத்தரவுகள் மற்றும் அதிகாரங்களை அரசியல் சாசனத்தின் 142-வது பிரிவின்கீழ் வேறுவகையில் பிறப்பிக்க முடியுமா?.

11. மாநில சட்டசபை நிறைவேற்றும் சட்டத்தை கவர்னரின் ஒப்புதல் இல்லாமலே அமலுக்கு கொண்டுவர முடியுமா?.

12. அரசியல் சாசனத்தின் 145(3)-வது பிரிவின்படி, அரசியல் சாசனம் குறித்த ஆழமான கேள்விகள் எழுப்பப்படும் வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அனுப்புவது கட்டாயம் இல்லையா?.

13. அரசியல் சாசனத்தின் 142-வது பிரிவின்கீழ், சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரங்கள், நடைமுறை சட்டத்துக்கு மட்டும் உட்பட்டதா? அல்லது அமலில் இருக்கும் அரசியல் சாசன நடைமுறைகளுக்கு முரண்பட்ட உத்தரவுகளை பிறப்பிக்க வழி செய்கிறதா?.

14. மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான சச்சரவுகளை அரசியல் சாசனத்தின் 131-வது பிரிவின்கீழ் சிறப்பு வழக்கு தொடுக்காமல், வேறு வகைகளில் தீர்வுகாண சுப்ரீம் கோர்ட்டின் அதிகார வரம்புக்கு அரசியல் சாசனம் தடையாக உள்ளதா?. மேற்கண்ட கேள்விகளை ஜனாதிபதி எழுப்பி இருந்தார்.

### முதல்வர் கண்டனம்...

தமிழ்நாடு கவர்னர் தொடர்பான வழக்கில் மத்திய அரசு ஜனாதிபதி மூலமாக சுப்ரீம் கோர்ட்டில் விளக்கம் கேட்பதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்து இருந்தனர். இதனால் இந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதற்கிடையே 14 கேள்விகளை ஜனாதிபதி எழுப்பிய விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டின் அடுத்தக்கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

### அரசியல் சாசன அமர்வு

இந்தநிலையில் இந்த விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதிகள் சூர்யகாந்த், விக்ரம் நாத், பி.எஸ்.நரசிம்மா, அதுல் எஸ்.சந்துருக்கர் ஆகிய 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு 22-ம் தேதி விசாரணை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, இந்த விவகாரம் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஜனாதிபதி திரௌபதி முர்முவின் 14 கேள்விகளுக்கு மத்திய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகளும் ஒரு வார காலத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என நோட்டீஸ் பிறப்பித்து, சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு ஆணையிட்டு உள்ளது.

# மருத்துவமனையில் இருந்தபடியே... (1-ம் பக்க தொடர்ச்சி)

தற்போது வரை இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 5,74,614 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில் எத்தனை மனுக்களுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் உரிய துறைகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா போன்ற விவரங்களை கேட்டறிந்த முதல்வர் தொடர்ந்து இந்த முகாம்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி நடத்தப்பட வேண்டும் என்றும், முகாம்களுக்கு மனுக்களை அளிக்க வரும் மக்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் குறித்தும் அறிவுரை வழங்கினார். மேலும், அவர் பெறப்படும் மனுக்களின் மீது குறிப்பிட்ட காலத்திற்குள் எவ்வித தொய்வுமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன். #உங்களுடன்-ஸ்டாலின் முகாம்கள் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா, தற்போதுவரையில் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை - தீர்வுகாணப்பட்டவை எத்தனை உள்ளிட்ட விவரங்களைத் தலைமைச் செயலாளரிடம் கேட்டறிந்து, மக்களின் மனுக்கள் மீது தீர்வு காண்பதில் எந்தவிதமான தொய்வும் ஏற்படக் கூடாது என அறிவுறுத்தியுள்ளேன் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி விமான நிலையத்தை... (1-ம் பக்க தொடர்ச்சி)

சில நிகழ்ச்சிகளிலும் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

அங்கு நடக்கும் விழாவில் ரூ.2,357 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சேத்தியாதோப்பு-சோழபுரம் பகுதி நான்குவழி சாலை, ரூ.200 கோடி மதிப்பீட்டில் 6 வழிச் சாலையாக மாற்றப்பட்ட தூத்துக்குடி துறைமுக சாலை, ரூ.99 கோடி மதிப்பீட்டில் மதுரை-போடிநாயக்கனூர் இடையே 90 கிலோ மீட்டர் தூரத்துக்கு மின் மயமாக்கப்பட்ட ரயில் பாதை மற்றும் ரூ.650 கோடி மதிப்பீட்டில் நாகர்கோவில் டவுன்-நாகர்கோவில் சந்திப்பு-கன்னியாகுமரி ரெயில் பாதை இரட்டிப்பு ஆக்குதல் (21 கிலோ மீட்டர் தூரம்) ஆகிய முடிவுற்ற நலத்திட்ட பணிகளை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

மேலும் ரூ.548 கோடி மதிப்பீட்டில் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அலகு 3 மற்றும் 4-வது பிரிவில் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காக உள்ள மின் பரிமாற்ற அமைப்பு பணிகளுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டுகிறார். மொத்தம் ரூ.4,500 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டப்பணிகளுக்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்ட உள்ளார்.

பிரதமர் மோடி வருகையையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் தூத்துக்குடி விமான நிலைய கூட்ட அரங்கில் நடந்தது. கூட்டத்துக்கு இந்திய விமான நிலையத்தின் ஆணைய தலைவர் விபின் குமார் தலைமை தாங்கினார். இதில் மாவட்ட கலெக்டர் இளம்பகவத், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான், விமான நிலைய அதிகாரி சுரேஷ், சரத்குமார், அனில்குமார், விமான நிலைய இயக்குனர் (பொறுப்பு) காட்வின், திட்ட இயக்குனர் பாரி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே பிரதமர் மோடியின் தூத்துக்குடி வருகையால் பா.ஜ.க.வினர் உற்சாகம் அடைந்துள்ளனர். பிரதமருக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்க பா.ஜ.க.வினர் ஏற்பாடு செய்து வருகின்றனர். பாரதிய ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட தலைவர் சித்ராங்க தன் தலைமையில் இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

தூத்துக்குடி நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு அன்று இரவு 9.30 மணிக்கு பிரதமர் மோடி இந்திய விமானப் படைக்கு சொந்தமான விமானம் மூலம் திருச்சிக்கு புறப்பட்டு செல்கிறார். அன்று இரவு அவர் திருச்சியில் தங்குகிறார். மறுநாள் (27-ம் தேதி) ஞாயிற்றுக்கிழமை காலை அவர் திருச்சியில் இருந்து அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்துக்கு செல்கிறார். அங்குள்ள சிவாலயத்தில் ராஜேந்திர சோழ மன்னனின் திருவாதிரை பிறந்த நாள் விழா நடக்கிறது.

விழாவில் பங்கேற்பதற்கு முன்பு கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரதமர் மோடி சுமார் 700 மீட்டர் தூரத்துக்கு ரோடு ஷோ மேற்கொள்வார் என்று தெரிய வந்துள்ளது. ரோடு ஷோ முடிந்ததும் அவர் தமிழக பா.ஜ.க நிர்வாகிகளை சாதாரணமான முறையில் சந்தித்து நலம் விசாரிப்பார். இதையடுத்து அவர் ராஜேந்திர சோழன் பிறந்த நாள் விழாவில் பங்கேற்பார். விழாவில் ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிடுகிறார். பிறகு இளையராஜாவின் திருவாசகம் சிம்பொனி இசை நிகழ்ச்சியை கண்டு களிக்கிறார்.

விழாவில் ஆதீனங்கள், சாதுக்களையும் பிரதமர் மோடி சந்தித்து பேச உள்ளார். இதையொட்டி கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. கங்கைகொண்ட சோழபுரத்தில் காலை 10 மணி முதல் 12 மணி வரை முக்கிய விழா நிகழ்ச்சிகளில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். அதன் பிறகு அவர் தஞ்சை பகுதிக்கு செல்வாரா? அல்லது டெல்லிக்கு செல்வாரா? என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

# தனிநபர் வருமானத்தில் தமிழகத்திற்கு 2-ம் இடம்

## மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, ஜூலை 23-

தனிநபர் ஆண்டு வருமானத்தில் தமிழகம் 2-ம் இடம் பிடித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டின் தனிநபர் ஒருவரின் ஆண்டு வருமானம் ரூ.1,96,309 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற மக்களவையில் பீகார் எம்.பி.க்கள் 2 பேர் நாட்டின் தனிநபர் வருமான விவரங்களை கேள்விகளாக கேட்டு இருந்தனர். இதற்கு மத்திய நிதித்துறை இணை மந்திரி பங்கஜ் சவுத்ரி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:-

புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தேசிய புள்ளிவிவர அலுவலகம் வெளியிட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, 2024-2025-ம் ஆண்டுக்கான நிலையான விலையில் தனிநபர் நிகர தேசிய வருமானம் ரூ.1,14,710 ஆக உள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 2014-2015-ம் ஆண்டுக்கான நிலையான விலையில் இது ரூ.72,805 ஆக இருந்தது.

தனிநபர் வருமானம், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இடையில் மாறுபடும். இது பொருளாதார வளர்ச்சியின் நிலைகள், துறைசார் அமைப்பு, கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிர்வாக வழிமுறைகளில் உள்ள வேறுபாடுகள் போன்ற பல்வேறு காரணிகளால் ஏற்படக்கூடும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும், மாநிலங்கள் வாரியான தனிநபர் வருமான விவரங்களும் அளிக்கப்பட்டு இருந்தன.

இதன்படி நாட்டில் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள மாநிலமாக கர்நாடகம் திகழ்கிறது. அங்கு 2024-2025-ம் ஆண்டு தனிநபர் வருமானம் ரூ.2,04,605 ஆக இருந்தது. 2-வது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.

தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ரூ.1,96,309 ஆகும். இதற்கு அடுத்த இடங்களில் அரியானா (ரூ.1,94,285), தெலுங்கானா (ரூ.1,87,912), மராட்டியம் (ரூ.1,76,678), இமாச்சல பிரதேசம் (ரூ.1,63,465) ஆகிய மாநிலங்கள் உள்ளன.